விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 07 திங்கட்கிழமை (22.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003




## புலிகளின் 'மோட்டார் பருவமழை' தாக்குதல்

# நான்காவது ஈழப் போர் 2009-ம் ஆண்டிலும் தொடரும்

## இக்பால் அத்தாஸ் ஆருடம்

(கொழும்பு)

கிளிநொச்சியை கைப்பற்றுவதற்காக கடந்த வாரம் மூன்று முக்கிய படையணிகள் இணைந்து நடத்திய தாக்குதல் பெரும் தோல்வியில் முடிந்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவில்,திருநெல்வேலியில் இரு சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மந்துவில் வேம்பிராய் பகுதியில் சனநடமாட்டமற்ற பற்றைப் பகுதியிலிருந்து 30 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட இந்தச் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சாவகச்சேரி பதில் நீதவான் கணபதிப்பிள்ளை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலத்தை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இல்லாவிட்டால் 5 நாட்களின் பின்னர் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணி; கருணாவால் புதிய கட்சி ஆரம்பம்

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற கருணா எம்.பி. தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணி என்ற புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக தமக்கும் தகவல் கிடைத்திருப்பதாக தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் செயலாளர் கைலேஸ்வரராஜா கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கூறினார். எனினும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளில் எந்த மாற்றமும் இல்லை. பிள்ளையான் அதன் தலைமைப்பொறுப்பில் தொடர்ந்தும் இருப்பார் என அவர் தெரிவித்துள்ளார்.

கருணா எம்.பியால் உருவாக்கப் பட்டிருக்கும் புதிய கட்சியின் விலாசம் மட்டக்களப்பில் உள்ள தேனகம் எனக் கொடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஊடகம் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

புதிய கட்சி உருவாக்கம் பற்றியும் தனது நடவடிக்கை குறித்தும் கருணா எம்.பி. தனது ஆதரவாளரான கிழக்கு மாகாண சபை உறுப் பினர் பிரதீப் மாஸ்டருக்கு அனுப்பி வைத்திருப்பதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை இது தொடர்பாக கருத் துரைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கருணா இது எவ்வித அடிப்படையும் இல் லாமல் வெளியிட்டுள்ள செய்தி என தெரிவித்துள்ளார். (ந-5)



## இளம் பெண் மீது துப்பாக்கிச் சூடு

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் மூத்த விநாயகர் கோவில் வீதியில் துரைசிங்கம் ஆரதிகா (20 வயது) என்பவர் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இராணுவத்தினர் எனக் கூறி வீட்டிலிருந்தவர்களை வெளியே அழைத்துள்ளனர். பெண்ணின் தந்தையாரின் கழுத்தை நெரித்து அவர் மீது தாக்குதல் நடத்திய குழுவினர் வீட்டிலிருந்தவர்களின் பெயர்களைக் கேட்டதுடன் ஆரதிகாவின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

காலில் காயமடைந்த ஆரதிகா யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-1)

## படைச் சிப்பாய் ஒருவர் புலிகளிடம் பிடிபட்டார்

கிளாலியில் படையினரின் பாரிய முன்நகர்வு நடவடிக்கையின் போது படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளதாக விடு தலைப் புலிகள் அறிவித்துள்ளனர். கிளாலியில் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை படையினர் மேற்கொண்ட முன்நகர்வு தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. இதில் படைத்தரப்பைச் சேர்ந்த 50 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 160 பேர் காயமடைந்திருந்தனர். இம்முறியடிப்பின் போது படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவர் உயிருடன் பிடிக்கப்பட்டார் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ந-5)

## இரணைமடு மீட்புச் சமரில் 60 படையினர் பலி

### 15 சடலங்கள் எம்மிடம் -புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுப் பகுதியில் படையினர் கைப்பற்றிய 2 கிலோமீற்றர் முன்னரண் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் மூலம் மீட்கப்பட்டபோது 60 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 150 பேர் காயமடைந்துள்ளனர்.படையினரின் 15 உடலங்கள் உட்பட படையப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது, முறிகண்டியில் உள்ள இரணைமடு பகுதியில் நேற்று முன்தினம் காலை 6.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் மூலம் இந்த முன்னரண் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை(16.12.08) படையினரால் கைப்பற்றப்பட்ட முன்னரணே இப் பகுதியாகும். விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலினால் படையினர் பலத்த இழப்புக்களுடன் அவர்கள் கைப்பற்றியிருந்த அரண் பகுதியைக் கைவிட்டுச் சென்றனர்.இதன் பின்னர் அந்த இரண்டு கிலோமீற்றர் நீளமான முன்னரண் பகுதி விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டது. (ந-5)

## ஆயுதம் ஏந்திய எதிரிகளை விட மறைமுகமான தீய சக்திகளே ஆபத்தானவை

### மனித் நேய செயற்பாட்டாளர்களாகவும் இவர்கள் இருக்கலாம் –ஜனாதிபதி

(கொழும்பு)

தாய் நாட்டுக்கு அதிக அழிவை ஏற்படுத்தக்கூடிய சில வெளித் தெரியாத சக்திகள் ஆயுதம் தாங்கிய எதிரிகளை விட மோசமானவை இவர்களை இல்லாதொழிக்கவேண்டும்.

இவ்வாறான சக்திகள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் போன்ற போர்வையிலும் காணப்படக்கூடும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.


உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதம் தாங்கிய எதிரிகளை எமது வீரம் மிக்க ஆயுதப் படையினர் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்கள் வெளியேற அனுமதிக்க வேண்டும்

### நேற்றுப் பேரணி

வன்னியிலுள்ள மக்களை அங்கிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்க வேண்டுமெனக்கோரி நேற்றைய தினம் வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் பேரணி நடத்தப்பட்டுள்ளது.ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் நடந்த இப் பேரணியில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னி மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்க வேண்டுமெனக் கோஷமிடப்பட்டது. (ந-5)

# காரைநகரில் அமரர் தி.மகேஸ்வரனின் ஓராண்டு நினைவு...



படங்கள்: ஐங்கரன்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தி.மகேஸ்வரனின் ஓராண்டு நினைவு நிகழ்வு நேற்று காரைநகர் மாணிக்கவாசகர் மணிமண்டபத்தில் இடம்பெற்றபோது பண்டிதர் வேலாயுதபிள்ளை தலைமையுரையாற்றுவதையும், பத்திரிகையாளர் ஐயா சச்சிதானந்தம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் சிவரத்தினம், யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் நினைவுப் பேருரையாற்றுவதையும் மகேஸ்வரனின் நினைவுகள் அடங்கிய புத்தகங்களின் வெளியீட்டுரையை ஆசிரியர் என்.விஜயசுந்தரம் நிகழ்த்துவதையும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் நினைவுப் புத்தகங்களை வெளியிட்டு வைக்க, முன்னாள் நீதிபதி எ.ஏகநாதன் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கிளிநொச்சி நோக்கி முன்னேறிய படையினரை அலை அலையாய் வந்து தாக்கிய புலிகள்

## 'லக்பிம' ஊடகம் பிரமிப்பு

கிளிநொச்சி மற்றும் கிளாலி களமுனைகளில் படையினர் நடத்திய வல்வளைப்பு நடவடிக்கைகளை புலிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தியதை கொழும்பு ஊடகம் மிகப் பிரமிப்புடன் செய்தியாக வெளியிட்டுள்ளது.

லக்பிம வார ஏட்டில் வெளியான பாதுகாப்பு பத்தியில் இடம்பெற்றுள்ளதாவது,

படையினரின் 53 மற்றும் 55 ஆவது படையணிகள் மிக உக்கிர மோதல்களை கடந்த வாரம் சந்தித்துள்ளன. பாதகமாக காலநிலையும் ,சதுப்பு நிலங்களும் காயமடைந்த படையினரை அகற்றுவதில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தன.

கிளாலி -முகமாலை கள முனைகளில் உள்ள விடுதலைப்புலிகளின் பலம் தொடர்பாக படையினர் தவறான கணிப்பைக் கொண்டிருந்தனர்.

ஆனால் அங்கு விடு தலைப்புலிகளின் பலம் அதிகம். இருபடையணிகளும் அதிக இழப்புக்களை சந்தித்த பின்னர் பின்வாங்கியுள்ளன.

55ஆவது படையணி ஏ-9 வீதி வழியாகவும்,53ஆவது படையணி அதற்கு கிழக்குப் புறமாகவும் நகர்வுகளை மேற்கொண்டிருந்தன. படையினர் தமது ஆயுதங்களுடன் பனை மரக்குற்றிகளையும்,மணல் சாக்குகளையும் மேலதிகமாக தமது தோல்களில் காவிச்சென்றனர். இது உடனடியாக காப்பரண்களை அமைப்பதற்கு உதவும்.

விடுதலைப்புலிகளின் முன்னணி அரண்களின் அல்மவுப்புள்ளிகள் அவர்க ளின் மோட்டார் அணிகளுக்கு நன்கு பரீட்சையமானது என்பதனால் படையினர் புதிய காப்பரண்களை அமைக்க வேண்டிய தேவை இருந்தது. இதனிடையே 55ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பிரசன்னா சில்வா தனது கள முனை அதி காரிகளை முன்னணி அரண்களுக்குச் சென்று விடுதலைப்புலிகளின் காப்பரண்களின் பலம் தொடர்பாக கண்காணிக்குமாறு பணித்திருந்தார்.

பிரசன்ன சில்வா முன்னர் சிறப்புப் படையணியின் கட்டளைத்தளபதியாக பணியாற்றியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்பார்த்ததைவிட அதிகளவான விடுதலைப்புலிகள் அங்கு பிரசன்னமாகி யிருந்ததை களமுனை அதிகாரிகள் அவதானித்துள்ளனர்.

சதுப்பு நிலங்களின் ஊடாக காயமடையும் படையினரை அகற்றுவது கடினம் என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தனர். பகல் வேளையில் வெளியான பிரதேசத்தின் ஊடாக காயமடைந்த படையினரை அகற்றுவது மேலும் கடினமானது.

தொடக்க மோதல்களில் 55ஆவது படையணியைச்சேர்ந்த 4 படையினர் காயமடைந்ததுடன் அதில் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

எனவே நடவடிக்கையை தொடர்வதை 55ஆவது படையணியின் கட்டளை அதிகாரி விரும்பவில்லை அவர்கள் தமது முன்னைய நிலைகளுக்கு திரும்பி விட்டனர்.

ஆனால் 53ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் கமல்குணரட்ண நடவடிக்கைகைய தொடர்வதில் தீவிரமாக இருந்தார். கடுமையான சமர் மூண்டது. இழப்புக்கள் அதிகமாவதை அவதானித்த படையினர் பின்னர் பின்வாங்க முடிவு செய் தனர்.

வெளியான பிரதேசங்களின் ஊடாக பின்வாங்கிய போதே அதிக இழப்புக்களை படையினர் சந்தித்ததாக சில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த படையினரை காப்பாற்ற முயன்ற சமயம் பல படையினர் கொல்லப்பட்டனர். இந்த சமரில் 26 படையினர் கொல்லப்பட்டதுடன் 89 படையினர் காயமடைந்திருந்தனர்.

அதே சமயம் காலை 6 மணியளவில் 57 மற்றும் 58ஆவது படையணிகள் கிளிநொச்சி நோக்கிய நகர்வை ஆரம்பித்தனர். விடுதலைப்புலிகளின் 12 கிலோ மீற்றர் நீளமான எல் வடிவ காப்பரணைக் கைப்பற்றுவதே அவர்களின் முதன்மையான நோக்கம்.

விடுதலைப்புலிகள் உக்கிரமான எதிர்த் தாக்குதலை நடத்தினர். சதுப்பு நிலங்களின் ஊடாக நகர்வது கடினம் என உணர்ந்த 58ஆவது படையணி தனது நடவடிக்கையை கைவிட்டது. எனினும் 57ஆவது படையணி நடவடிக்கையைத் தொடர்ந்தது.

57ஆவது படையணியின் 3 பிரிக் கேட்டுக்கள் இந்த நடவடிக்கையில் பங்கு பற்றியிருந்தன. அடம்பனில் இருந்து 57-1 பிரிக்கேட் நகர்வை மேற்கொண்ட போது விடுதலைப்புலிகளின் எறிகணைத் தாக்குதல்கள் உக்கிரமாக இருந்தது.

இராணுவம் வான் படையினரை உதவிக்கு அழைத்தது. 57-2 பிரிக்கேட் இரணைமடு பகுதியால் நகர்வை மேற்கொண்டது. 57-4 ஆவது பிரிக்கேட் இரணை மடுக்குளம் பகுதி ஊடாக நகர்ந்தது.

விடுதலைப்புலிகள் அலை அலையாக வந்து தாக்கினார்கள். 12ஆவது சிங்க றெஜிமென்ட் அதிக சேதங்களை சந்தித்தது. இழப்புக்கள் அதிகமாவதை அவதானித்த படையினர் பின் வாங்க முடிவு செய்தனர். இதன் போது 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 15பேர் காணாமல் போயினர்.

இந்த சமரின் போது கோப்ரல் நமால் உடுவத்தையும் அவரது குழுவினரும் சிறப்பாக செயற்பட்டிருந்தனர். உடனடியாக அவர் சார்ஜனாக பதவி உயர்த்தப்பட்டிருந்தார். ஆனால் அவர் பின்னர் நடைபெற்ற சமரில் கொல்லப்பட்டுவிட்டார். உக்கிரமான எதிர்ச் சமரைத் தொடர்ந்து 57-2 ஆவது பிரிக்கேற் தமது நிலைகளில் இருந்து பின்வாங்கியது.

விடுதலைப்புலிகள் இந்தப்குதியில் மூர்க்கமாக தாக்குதலை நடத்தி வருகின்றனர். சில இடங்களில் இருந்து படையினரை பின்வாங்கவும் செய்துள்ளனர். கால நிலையும் படையினருக்கு சாதகமானது அல்ல. இறுதியான தகவல்களின்படி 80 படையினர் கொல்லப்பட்டதுடன் 250ற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். விடுதலைப்புலிகள் படையினரின் 36 உடலங்களை கைப்பற்றியிருந்தனர்.கொல்லப்பட்ட படையினரை அகற்றுவதில் படையினர் அதிக சிரமங்களைச் சந்தித்திருந்தனர். இதனிடையே முல்லைத் தீவை தனிமைப் படுத்துவதே படையினரின் நோக்கம் என படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இது எவ்வாறு சாத்தியமானது என்பது எதிர்வரும் மாதங்களில் தெரிந்துவிடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# இன்று ஒரு தகவல்

## சட்டமும் சட்டையும்

எனது நண்பர் ஒருர் வழக்கறிஞராக இருந்தார். ஒருநாள் அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

"நீங்களெல்லாம் கோர்ட்டில் வாதாடும் போது கறுப்பு நிற அங்கி அணிகிறீர்கள். அதற்கு ஏதாவது காரணம் உண்டா? சட்டத்துக்கும் கறுப்பு நிறத்திற்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டேன்.

"அது ஒரு சுவாரஸ்யமான கதை'' என்றார் அவர்.

கி.பி.1694ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசி இரண்டாவது மேரி இறந்தார். அந்த ராணியின் கணவர் மூன்றாம் வில்லியம் ஒரு உத்தரவிட்டாராம்.

அதாவது அரசியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வழக்கறிஞர்கள் எல்லோரும் கறுப்பு நிற அங்கி அணிய வேண்டும் என்பது தான் அந்த உத்தரவு.

அன்று ஆரம்பித்த அந்தப் பழக்கம் அதற்குப் பின்னரும் மாறவில்லை. இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

வழக்கறிஞர்களெல்லாம் முதலில் கறுப்பு அங்கி மட்டும் தான் அணிந்தார்களாம். ஆனால், ஏற்கனவே கறுப்பாக இருப்பவர்கள் அந்த உடையை போட்டுக்கொண்டால் முகம் பளிச்சென்று தெரிவதற்காக அவர்களெல்லாம் வெள்ளை நிற பட்டியை அணிந்தார்களாம்.

இப்படித்தான் இங்கிலாந்தில் அந்தப் பழக்கம் ஆரம்பமாகியிருக்கிறது.

அந்த சமயத்தில் பிரிட்டிஷ் காரரின் ஆட்சியில் இருந்த நாடுகளிலும் அந்தப் பழக்கம் நடைமுறைக்கு வந்தது.

அதே மாதிரி சேர்ச்சிலின் மூதாதையரான மார்ல்பரோ பிரபுவின் ஞாபகார்த்தமாக நீதிபதிகள் வெள்ளைக் குல்லாய் அணியும் முறை பழக்கத்திற்கு வந்ததாம். இதுதான் என்னுடைய நண்பர் சொன்ன தகவல்.

இங்கிலாந்தில் நீதிமன்றம் என்பது மிகவும் மதிப்பு வாய்ந்தது. அந்தளவிற்கு அங்கு சட்டத்துக்கு மரியாதை. அங்கு நடந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியை ஒரு சகோதரி எழுதியனுப்பியிருக்கிறார். அவருடைய தந்தை நீதித்துறையைச் சேர்ந்தவர் அவர் சொன்ன விடயம்.

அங்கு ஒரு வழக்கில் முக்கிய தீர்ப்பு வழங்க வேண்டியிருந்தது. நீதிபதி, பெரியபெரிய வக்கீல்கள், ஜுரி எல்லோரும் கூடி அந்த கேஸைப் பற்றி விவாதிக்க வேண்டும். சுமார் 40 பேர் கலந்து கொண்டனர்.

நீதிமன்றத்துக்குள் நுழைபவர்கள் போகமுன்பு மண்டபத்தில் உள்ள அட்டெண்டரிடம் தமது கோர்ட்–தொப்பி எல்லாவற்றையும் கழற்றி கொடுத்துவிட்டே உள்ளே நுழைய வேண்டும்.

அவர் படிப்பறிவில்லாதவர். ஒவ்வொருவர் கொடுப்பதையும் வாங்கி உள்ளே வைத்துக்கொண்டிருந்தார்.

அதுதான் அவருடைய வேலை. உள்ளே போன நீதிபதி –வக்கீல் – ஜுரி எல்லோரும் அதிகநேரம் அந்த கேஸைப் பற்றியே விவாதித்தார்கள்.

ஒரு நாள் ஆகிவிட்டது. அவ்வளவு தீவிரமாக அந்த விவாதம் நடந்து கொண்டிருந்தது.

ஒரு வழியாக 13 மணி நேரம் கழித்து வெளியே வந்தார்கள்.

ஒவ்வொருவராக வரவர அந்த அட்டெண்டரும் அவர்களது கோர்ட் –தொப்பியை மரியாதையாக திருப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தாராம்.

கடைசியாக நீதிபதி தீர்ப்பெல்லாம் எழுதி முடித்துவிட்டு திருப்தியுடனும் களைப்புடனும் வெளியே வந்துகொண்டிருந்தாராம். இவர் அவருடைய மேலங்கியையும் தொப்பியையும் எடுத்து அவரிடம் மிக மரியாதையுடன் நீட்டினாராம்.

நீதிபதிக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த ஆள் எப்படி இவ்வளவு பேரின் கோர்ட்–தொப்பியை பிசகாமல் ஞாபகத்தில் வைத்திருக்கிறார். அதனால், அவர் அந்த ஆளைப் பார்த்து.

"ஏனப்பா... இந்தக் கோர்ட்டை கொடுக்கிறாயே...இது என்னுடையது தான் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்றாராம்.

அதற்கு அவன் சொன்னபதில்.

"ஐயா ! இந்தக் கோர்ட் – தொப்பியை உங்களிடம் வாங்கி மாட்டினேன் இப்பொழுது திரும்ப உங்களிடம் தரவேண்டும் தந்துவிட்டேன். இதுதான் எனது வேலை. மற்றப்படி இது உங்களுடையதாக இல்லையா என்று எனக்குத் தெரியாது!'' என்றானாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

---

### வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட

# 171 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜனவரியில் நிரந்தர நியமனம்

(திருகோணமலை)

வடக்கு மாகாணத்தில் முதல் கட்டமாக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 171 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜனவரியில் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண பாடசாலைகளில் 530 தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்ற போதும் 171 தொண்டர் ஆசிரியர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முதற்கட்டமாக கடந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்டனர்.

எனினும், வடக்கு மாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் முழுமையாக நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டுமென சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பத்திரத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 171 தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள் இடை நிறுத்திவைக்கப்பட்டது.

தற்போது வடக்கு மாகாணத்திலுள்ள ஏனைய 359தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர ஆசிரியர் நியமனங்கள் வழங்கவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவிற்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில் கல்வி அமைச்சரினால் விஷேட அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதல் கட்டமாக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 171 தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஜனவரி மாதம் நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்ததுடன்,

ஏனைய 350 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன் இரண்டாம் கட்டமாக வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (5)

---

### கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# ஆசிரியர் நியமனம் கிடைத்த பட்டதாரிகளுக்கு சொந்த இடங்களில் தற்காலிக இணைப்பு

### வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை

(திருகோணமலை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆசிரியர் நியமனம் பெற்ற வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு அந்தந்த மாவட்டங்களிலே தற்காலிக இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் அண்மையில் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. எனினும் தற்போது நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆசிரியர் நியமனம் கிடைத்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு அவர்களின் சொந்த இடங்களிலே ஜனவரி முதல் தற்காலிக இணைப்பு வழங்க வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடையே ஆலோசிக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தது.(5)

---

# புதிய சாரதி அனுமதிப்பத்திரம் அடுத்த வருடம் முதல் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த வருடம் முதல் புதிய சாரதி அனுமதிப்பத்திரமொன்றை அறிமுகப்படுத்த மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இந்த புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தின் மூலம் மோசடிகளை வெகுவாகக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்போர் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்க விண்ணப்பிப்போர் இந்த புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிச் செயற்படும் சம்பவங்கள் குறித்து தகவல்கள் சேகரிக்கும் வகையில் விசேட இலத்திரனியல் சிப் ஒன்று குறித்த சாரதி அனுமதிப்பத்திரத்தில் பொருத்தப்படவுள்ளது.

குற்றச்செயல்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட உள்ளதாகவும் குறித்த மதிப்பெண்களை தாண்டுவோரது அனுமதிப் பத்திரங்களை ரத்துச் செய்யவும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது. (5)

---

## இராசி பலன்

*22.12.2008*
*(மார்கழி 07, திங்கட்கிழமை)*
*தசமி முற்பகல் 10.02 மணிவரை*
*சித்திரை முற்பகல் 10.17 மணிவரை*
*இராகுகாலம் 7.55-9.25 மணிவரை*
*சுபநேரம் 12.25-01.55 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | அபூர்வ சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், தெய்வ நம்பிக்கை, கீர்த்தி |
| இடபம் | ஆரோக்கிய நிலை, சத்துருஜெயம், முயற்சிகைகூடும், உற்சாகம். |
| மிதுனம் | வியாபார நன்மை, மரியாதைக் குறைவு,வேலைச்சுமை, பணக் குறைவு |
| கடகம் | கல்வியில் ஆர்வம், புதிய முயற்சி, மனச்சஞ்சலம், சுபசெலவு. |
| சிங்கம் | கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை, அதிகாரம். |
| கன்னி | விவாதம், வேலைச்சுமை, காரிய தாமதம், பணவிரயம். |
| துலாம் | உறவினர் சந்திப்பு, தன்னம்பிக்கை, போசன சுகம், புதிய முயற்சி. |
| விருச்சிகம் | இடமாற்றம், சுபசெலவு, உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம். |
| தனுசு | கீர்த்தி, எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், குடும்ப மகிழ்ச்சி. |
| மகரம் | அதிகாரம், கடின முயற்சி, தூர தேசச் செய்தி, தேகநலன். |
| கும்பம் | புதியதிட்டமிடல், பிரயாணம், பிதாசிந்தை, ஆரோக்கியக் குறைவு. |
| மீனம் | அபகீர்த்தி, எதிரிகள் தொல்லை, காரிய தடங்கல், போசன சுகம். |

வளவன்

---

# விண்ணப்பம் கோரல்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை எதிர்வரும் 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் மறைப்.பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்தி பெற்று மறைப்பாடசாலையின் இறுதி நற்சான்றுப் பத்திர வகுப்பில் ஒருவருடம் கல்வி பயின்றிருத்தல் அல்லது க.பொ.த சாதாரண பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ.க) பாடத்தில் சித்தி அல்லது சிரேஷ்ட பாடசாலை சான்றுப் பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ.க.) பாடத்தில் சித்தி அல்லது

அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் 11ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு. வெளிநாட்டு பரீட்சைகள் கிளை பெலவத்தை பத்திரமுல்ல எனும் முகவரிக்கு ஜனவரி மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் கடந்த 19 ஆம் திகதி வெளியான வர்த்தகமானியில் பார்வையிடலாம். (5,6)

## சிறுவர் குரல் அலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் சிறுவர் கழகங்கள் இணைந்து நடத்தும் சிறுவர் குரல் அலைகள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உரும்பிராய் கிருஷ்ணா சிறுவர் கழக தலைவர் செல்வி மகாலிங்கம் யசோதா தலைமையில் இடம்பெறவுள்ளது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.யுனிசெவ் பிரதிநிதி மகினொடா,கௌரவ விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரி சிரேஷ்ட மாணவத்தலைவர் இரா.ஜெயக்கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலை உளநல மருத்துவர் கலாநிதி செல்வி முல்லை பரந்தாமனின் சிறப்புச்சொல்லாற்றுகையும் நடைபெறவுள்ளது. (5-4)

## இவ்வருடம் யாழ்.நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 190 மரணங்கள்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 12 ஆம் திகதி வரை 190 மரணங்கள் பதியப்பட்டுள்ளன.

அவற்றில் 146 மரணங்களுக்கு தீர்வு காணப்பட்டு ஏனைய 44 மரணங்களுக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 57 இயற்கை மரணங்களும், தீயினால் எரியுண்டு 4மரணங்களும் , தூக்கிட்டு 7 மரணங்களும், நஞ்சு அருந்தி 13 மரணங்களும்,கிணற்றில் விழுந்து 2 மரணங்களும் பதியப்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூடு மூலம் 19மரணங்களும், குழுக்களுக்கிடையிலான மோதல் மற்றும் ஏனையவை மூலம் 17 மரணங்களும் விபத்து மரணங்களாக வீதிவிபத்தில் 8மரணங்களும், குண்டுவெடிப்புக்களின் போது அகப்படுதல் மற்றும் ஏனையவை மூலம் 14 மரணங்களும் நிகழ்ந்துள்ளதாக பதிவுசெய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்டவற்றில் 146 மரணங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதுடன் 44 இற்கு தீர்வுகாணப்படாது விசாரணையில் உள்ளன. (5)




## நத்தார் நிகழ்வுகள்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அற்புத மத்தியஸ்தானம்,அசெம்பளி ஒவ்கோட் திருச்சபையின் நத்தார் சிறப்பு நிகழ்வுகள் சபைமண்டபத்தில் மாலை 3.30 மணிக்கு அருட்பணி க.ராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆராதனைகளை அடுத்து நத்தார் கீதங்கள், மழலைகளின் முத்தமிழ் நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு போதகர் க.ராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-36)

✝✝✝

(யாழ்ப்பாணம்)

யாழ்.சத்தியசாயி நிலையத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நத்தார் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாவாந்துறை பங்குத் தந்தை அருட்பணி எம்.வி.ரவிச்சந்திரன் அடிகளாரின் சிறப்புச் சொற்பொழிவும், நத்தார் கீதங்கள், நத்தார் பாப்பா வருகை என்பனவும் இடம்பெறவுள்ளது. (5-4)

## சர்வதேச சுத்திகரிப்பு ஆண்டை முன்னிட்டு மாணவர்களிடையே சித்திரப் போட்டி

(அல்வாய்)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் 2008 ஆம் ஆண்டு சர்வதேச சுத்திகரிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு சிறுவர்கள் மத்தியில் சிந்தனை ரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்தல் , அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்வதற்கான சர்வதேச சுத்திகரிப்பு ஆண்டின் செயற்பாடாக பாடசாலை மாணவர்களுக்கிடையே சித்திரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப் போட்டிகள் ஆரம்பப் பிரிவு ,கனிஷ்ட பிரிவு ,சிரேஷ்ட பிரிவு என மூன்று வயதெல்லையின் கீழ் நடைபெறும்.

சித்திரங்களை " எனது சுத்திகரிப்பு வசதிகள் மற்றும் சிறந்த சுகாதாரப் பழக்கம் " என்ற தொனிப் பொருளுக்கமைய பொருத்தமான தலைப்பை தேர்ந்தெடுத்து

- 18X14 அங்குல அளவில் பொருத்தமான கடதாசியில் வரைய வேண்டும்.
- எவ்வகையான வர்ணங்களையும் பயன்படுத்த முடியும்.
- மாணவர் ஒருவருக்கு ஒரு சுவரொட்டியை மாத்திரம் சமர்ப்பிக்கமுடியும்.

சகல ஆக்கங்களும் அதிபர்கள் ஊடாக IFRC, தொனிப் பொருள் சுத்திகரிப்பு , 16/2 கரகரிவீதி , கொழும்பு-7 என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இச் சித்திரப் போட்டியில் சகல மாகாணங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் 9 பேருக்கு பெறுமதியான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்விப் பணிப்பாளர்களால் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. (5 ,6 ,19)

## தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலைய நலன்புரி எழுதுநர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமை யதிபதியின் கீழ் இயங்கும் தெல்லிப்பளையில் அமைந்துள்ள பாதுகாப்பு தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையத்திற்கான நலன்புரி எழுதுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 24-35 வயதிற்குட்பட்ட கணனி மற்றும் தட்டச்சு பயின்ற இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் தமிழ் , ஆங்கிலம் நன்கு கதைக்கவும், எழுதவும் தெரிந்திருப்பதோடு சிங்கள மொழியறிவும் அவசியமாகும்.

விண்ணப்பிப்போர் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பிறப்பத்தாட்சிப் பத்திரம் , கிராம உத்தியோகத்தர் அத்தாட்சிப் பத்திரம்,கல்விச் சான்றிதழ் , தொழிற் தகைமைச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை பிரதி ஆகியவற்றின் உண்மைப் பிரதிகளை திட்டப் பணிப்பாளர் , புனர்வாழ்வு புனரமைப்பு செயலகம், மாவட்ட செயலகம் , யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். (5,6)

## நிஷா அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு உலக உணவுத் திட்டத்தின் மூலம் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாத இறுதியில் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற 'நிஷா' வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் மூலம் நிவாரணம் வழங்குவதற்கு தகவல்கள் எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஏற்கனவே முதற்கட்டமாக ஒருவார காலத்திற்குரிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், இரண்டாம் கட்டமாக உலக உணவுத் திட்டத்தினூடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஊடாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் க.கணேஷிடம் கேட்டபோது,

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தினூடாக நிவாரணங்கள் வழங்க தகவல்கள் சேகரிக்கப்பட்டபோதும் முடிவு ஏதும் எடுக்கவில்லையெனத் தெரிவித்தார். (5)

## சாட்டியில் புதிய நன்னீர்க் கிணறு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிப்புற்ற குடிதண்ணீர் விநியோகம் சீரடைந்துள்ளதாக விநியோகப் பொறுப்பாளர் விக்டர் ஜோர்ஜ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாட்டியில் புதிதாக ஒரு நன்னீர்க்கிணறு அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5,6,72)

## வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி (A.R.V) இன்று திங்கட்கிழமை முற்பகல் 9மணிமுதல் 10 மணிவரை வெஸ்லி சனசமூக நிலையத்திலும்,முற்பகல் 10 -11 மணிவரை குருநகர் தண்ணீர்த்தாங்கியடியிலும் முற்பகல் 11-12 மணிவரை 2ஆம் குறுக்குத் தெரு அன்னை வேளாங்கன்னி கோவிலடியிலும், பிற்பகல் 2-3 மணிவரை குருநகர் சனசமூக நிலையத்திலும் ,பிற்பகல் 3-4 மணிவரை குருநகர் சனசமூக நிலையத்திலும்,பிற்பகல் 3-4 மணிவரை புதுமைமாதா சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-2)



பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவால் பிரகடனப்படுத்தப்பட்ட நவம்பர் 19 ஆம் திகதியன்று யாழ். சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெற்ற திருவிளக்குப் பூஜை நிகழ்வைப் படத்தில் காணலாம்

## ஏகாதசி விரத உற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் ஏகாதசி விரதபூசைகள் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகளை அடுத்து வல்லிபுர நாதர் பூதேவி, ஸ்ரீதேவி சமேதராக வீதியுலா வரும் திருக்கோலக் காட்சியும் இடம்பெறும். (5-4-36)

## தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க ஊழியர்களுக்கு உணவுப் பொருட்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு தலா 2 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்க சங்க இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

அத்துடன், 'நிஷா' புயல் வெள்ளத் தின்போது பொதுமக்களுக்கு அளப்பரிய பணியாற்றிய 21 சங்கப் பணியாளர்களைக் கௌரவித்து அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா பணப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்துள்ளார். (5-29)

## பஸ் சேவை நிறுத்தம்; மக்கள் அசௌகரியம்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 4.15 இற்குப் புறப்படும் 877 ஆம் வழி இலக்க பஸ் சேவை தற்பொழுது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலை 2.15 இற்கும் பின்னர் 3 மணித்தியாலங்கள் கழித்து 5.30 மணிக்கே பஸ் புறப்படுவதாகவும் இதனால் பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் அரச தனியார் ஊழியர்கள் அதிக நேரம் கழித்தே வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதைக் கருத்தில் கொண்டு உரியவர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5,6,72)

# இலங்கையில் தமிழர் 18

*இந்நூலின் முக்கிய முடிவுகள்*

இந்நூலில் இடம்பெறும் ஆய்வின் முக்கிய முடிவுகளை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

1. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர், இன்றைய தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களும், கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் தென்பகுதிகளும் இலங்கையும் அடங்கியுள்ள நிலப் பகுதி ஒரு பொதுப் பண்பாட்டு வலயமாக அமைந்தது.

தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் உள்ள கடல் (சேதுசமுத்திரம், மன்னார்க்கடல், பாக்கு நீரிணை) 2000 ஆண்டுகளுக்கு முன் இரு நிலப் பகுதிகளையும் பிரித்து நிற்காது உண்மையில் இணைத்து நின்றது. இப் பொதுப் பண்பாட்டு வலயத்திற்கு இந் நூலில் தென்னிந்தியா இலங்கைப் பிராந்தியம் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலப் பகுதியில் தனித்தனி அரசுகள் தோன்றிய பின்னரும் பல்வேறு துறைகளில், குறிப்பாக மதம் மற்றும் கலை, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் வடக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் செல்வாக்குகள் பரவிய வண்ணம் இருந்தன. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே ஏற்பட்ட தொழில்நுட்ப பரிமாறல் இரு பிரதேசங்களிலும் சிறப்பெய்திய நீர்ப்பாசன தொழில்நுட்ப வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தது.

2. இலங்கையின் இருபெரும் இனக் குழுக்களாகிய சிங்களவரும் தமிழரும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் பெரும்பாலான இடங்களில் பரவி வாழ்ந்த இடைக்கற்கால மக்களின் வழித் தோன்றல்கள்.

3. வரலாற்றுத் தொடக்ககாலத்தில் தமிழ் பேசுவோரோ பிராகிருத மொழி பேசுவோரோ பெருந்தொகையினராக இலங்கைக்குப் புலம்பெயர்ந்து செல்லவில்லை. இலங்கையில் வாழ்ந்த இடைக்கற்கால மக்கள் புதிதாக வந்தவர்களால் அகற்றப்படவுமில்லை.

4. இந்தியாவின் மேற்குப் பகுதியிலிருந்தும் கிழக்குப் பகுதியிலிருந்தும் பிராகிருத மொழிபேசுவோர் இலங்கைக்குச் செல்வதற்கு முக்கிய காரணியாக அமைந்தது வர்த்தகம் ஆகும்.

5. பிராகிருத மொழி பேசும் வணிகர் இலங்கைக்கு மட்டுமன்றி, தென்னிந்தியாவிற்கும்( அதாவது முழுத் தென்னிந்தியா இலங்கைப் பிராந்தியத்திற்கு ) இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன் வரத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து இற்றைக்கு 2000ஆண்டுகளுக்கு முன் இவ் வணிகர் தென்கிழக்காசியாவிற்கும் செல்லத் தொடங்கினர்.

6. பிராகிருத மொழி பேசும் வணிகர் பரப்பிய செல்வாக்கின் விளைவாக மன்னார்க் குடாவின் (சேது சமுத்திரத்தில்) இரு கரையிலும் நகர மையங்கள் தோன்றி, அவற்றைச் சூழ குறுநில அரசுகள்( சிறப்பாக மதிரையும் தம்பபன்னியும்) உருவாகின. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் இதை யொத்த போக்கு தென்கிழக்காசியாவிலும் காணப்பட்டது.

இந்தியாவிலிருந்து வணிகர் தென்கிழக்காசியாவிற்கு சென்றபோது புதிய குறுநில அரசுகள் உருவாகுவதற்கும் இந்தியப் பண்பாட்டின் அம்சங்கள் பரவுவதற்கும் வழி திறக்கப்பட்டது. இக்குறுநில அரசுகளின் ஆட்சியாளர், முன்னர் மதிரை மற்றும் தம்பபன்னி ஆகிய குறுநில அரசுகளின் ஆட்சியாளர் செய்ததுபோன்று, இந்தியப் பண்பாட்டில் கூறுகளைத் தழுவிக்கொண்டனர்.

7. இடைக்கற்கால மக்கள் பல்வேறு மொழிகளைத் தம் மொழிகளாகப் பேசினர். இம் மொழிகள் அனைத்தும் வழக்கற்றுப் போக, அவற்றிற்கு பதிலாக ஆதி இரும்புக் காலத்தில் இரு புதிய மொழிகள் ஆதிக்கம் பெறத் தொடங்கின. சமூகத்தின் உயர் குழாத்தினரே இவற்றைப் பேசியதால், அவர்களுடைய ஆதிக்கத்தின் விளைவாக இம் மொழிள் பிற மக்களாலும் பேசப்பட்டு அவர்கள் தாய் மொழிகளாகின.

இலங்கையின் தென்பகுதியிலும் நடுப் பகுதியிலும் வாழ்ந்தோர் காலப் போக்கில் பிராகிருத மொழி ஒன்றைத் தாய்மொழியாகப் பேச, வடக்கு, வடமேற்கு மற்றும் வட கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்தோர் தமிழ்மொழியை தாய்மொழியாகப் பேசத் தொடங்கினர்.

பிராகிருதம் தென்னாசிய வணிகர்களின் பொதுமொழியாக வழங்கியதால் அம் மொழி சில நன்மைகளைக் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தது. தொடக்கத்திலிருந்தே இந் நிலை காணப்பட்டதால், பிராகிருதம் கூடுதலாகப் பரவுவதற்கான வாய்ப்பு இருந்தது அத்துடன், பல மொழிகளைப் பேசுவோர் மத்தியில் பொதுத் தொடர்பு மொழியாக வழங்குவதற்கும் பிராகிருதம் வாய்ப்புப் பெற்றிருந்தது.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

8. இலங்கையில் இருந்த பல்வேறு சிறு பண்பாட்டுக் குழுக்களையும் சமூகக் குழுக்களையும் உள்ளடங்கி இருபெரும் இனக் குழுக்களாகச் சிங்களவர் இனக்குழுவும் தமிழர் இனக்குழுவும் பரிணாமம் பெற்றமை 1200 அளவில் நிறைவு பெற்றது எனலாம். அதன் பின்னரும், மக்கள் கலப்பும் மாற்றங்களும் அண்மைக்காலம் வரை நடைபெற்றன. 1200 இன் பின் புவியியல் அடிப்படையிலும் இரு இனக்குழுக்களும் பிரிந்து போவதையும் காணமுடிகின்றது. (தொடரும்)

# பசுமைப் புரட்சிக்கு வித்திடும் நிழல் நிறுவனத்தின் கழகப் பணி

"மரத்தை வளர்ப்போம் மானுடம் காப்போம்" என்ற மகுட வாசகத்தை தாரகமந்திரமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே நிழல் நிறுவனமாகும். 2007ஆம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் மானிப்பாயில் தனது தலைமையலுவலகத்தையும் இணுவிலில் மரக்கன்று வளர்ப்பிற்கான பண்ணையையும் கொண்டு இயங்கி வரும் ஒரு கழக நிறுவனமாகும். இது காட்டு மரங்களையும் பயன்தரு மரங்களையும் வளர்த்து இலவசமாகப் பொது நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவதனூடே யாழ். மாவட்டத்தில் மரங்கள் நடுகையை ஊக்குவிக்கும் நோக்குடன் இயங்கி வருகின்றது.

நிழல் நிறுவனம் ஏற்கனவே ஒரு வருட காலத்தில் வளர்க்கப்பட்ட மரக்கன்றுகளை பாடசாலைகளுக்கும் கோவில்களுக்கும் பகிர்ந்தளிக்க தொடங்கியுள்ளதை இதுவரை அறுபதுக்கும் கிட்டிய பாடசாலைகளுக்கும் இருபதுக்கும் கிட்டிய கோவில்களுக்கும் இந் நிறுவனத்தால் மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. முதலில் சம்பிரதாய பூர்வமான மரக்கன்று கையளிப்பு அராலி இந்துக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டதுடன் அப் பகுதியில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் அக் கல்லூரியில் வைத்தே மரக்கன்றுகள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் அவர்களது எழுத்துமூலக் கோரிக்கையின் பேரில் மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நிழல் நிறுவனத்தினால் மலைவேம்பு, தேக்கு, சமண்டலை போன்ற காட்டு மரங்களும் பலா, கமுகு, விளாத்தி, கொய்யா, ஜம்பு, செரி, அகத்தி, தவசிமுருங்கை போன்ற பயன்தரு மரங்களும் பகிர்ந்தளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மரங்கள் இயற்கையாகவும், செயற்கையாகவும் அழிவடைந்து வரும் நடவடிக்கைகளே மரமீள் நடுகையில் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வீதிகளிலும் அயற் காணிகளிலும் காணப்பட்ட மரங்கள் வெட்டப்பட்டமையும், விறகுத் தேவைகளின் காரணமாக பொதுமக்களால் பெருமளவு மரங்கள் தறிக்கப்பட்டமையும் மட்டுமல்லாது அண்மையில் ஏற்பட்ட 'நிஷா' சூறாவளியினால் பெருமளவான மரங்கள் அழிவடைந்து போனமையும் எமது பிரதே சத்தில் மரநடுகையை வலியுறுத்தி நிற்கின்றன.

**சூழல் பாதுகாப்பும் மரநடுகையும்**

சூழல் பாதுகாப்புடன் மரநடுகை நெருங்கிய தொடர்புகொண்டிருப்பது யாவரும் அறிந்ததாகும். இதன்காரணமாகவே லயன்ஸ் கழகம், றோட்டரிக்கழகம் போன்ற கழக சேவை நிறுவனங்களும் மீள் மரநடுகையை முன்னெடுத்து வருவதனையும் காணலாம். இதன் அடிப்படையிலே யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்திற்கு ஏற்கனவே நிழல் நிறுவனமானது இலவசமாக மரங்களை வழங்கி பொதுமக்களூடாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மரநடுகையை ஊக்குவிக்கவும் வகை செய்துள்ளது. செப்ரெம்பர் மாதம் மர மீள் நடுகைக்கான மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு மரநடுகை ஊக்குவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



மரங்களை நடுவதனால் மண்அரிப்பைத் தடுத்து சூழல் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் என்பது விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். மரங்கள் நடப்படுவதனால் சூழல் பாதிப்படைவதனை தடுத்து நிறுத்திவிட முடியும். மரங்கள் திட்டமிடப்பட்ட வகையில் வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் மட்டுமன்றி பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளிலும் நடப்பட்டு வளர்க்கப்படலாம். இதன்மூலம் மண் அரிப்பு தடுக்கப்படுவது மட்டுமன்றி மழைவீழ்ச்சியையும் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அத்துடன் சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கும் அதனூடாக ஆரோக்கிய வாழ்விற்கும் மரங்களை வளர்த்தல் வாய்ப்பளிக்கும்.

நிழல் தரும் மரங்கள் கோடை காலத்தில் நிழல் தரும் அதே நேரம் அவற்றினால் உதிர்க்கப்படும் இலைகள் எமக்கு இயற்கை பசளையைத் தரு வதனையும் காணலாம். பயன் தரு மரங்கள் நாம் உட்கொள்வதற்கான பழங்களையும் சமைப்பதற்கான காய்கறி களையும் தருகின்றன. இயற்கை உணவு கள் மக்களின் உடல் ஆரோக்கியத்துக்கு உதவுவது மட்டுமன்றி மரக்கறித் தேவைகளில் பெரும் பங்கை நிவர்த்தி செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். மாவட்டமக்களின் விறகுத்தேவைகளின் பெரும் பங்கு முன்னர் காட்டு மரங்களின் நிரம்பல் ஊடாக பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால் தெருக்கள் மூடப்பட்டமையைத் தொடர்ந்து காட்டுமரங்கள் எடுத்து வரப்பட முடியாது போனதுடன் சமையல் எரி வாயுவின் வருகையும் அரிதாகிவிட்டது. இதன் காரணமாக சமையல் தேவைக்கான விறகினை உள்ளூரில் தேடிக்கொள்ளவேண் டிய நிர்ப்பந்தம் யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக பெருமளவு மரங்களை வெட்டி விறகுக்காக பாவிக்கும் நிர்ப்பந்தம் எம்மவர்கள் மேல் திணிக்கப்பட்டது. இது மர அழிப்பிற்கு பிரதான காரண மாகிவிட்டதால் தறிக்கப்படும் மரங்களுக்கு பதிலாக புதிய மரங்களை நாட்ட வேண்டும் என குடாநாட்டு மக்கள் வலியுறுத்தப்பட்டு வருகின்றனர். அத்தகைய நிலையைச் சமாளிக்க நிழல் நிறுவனம் பிரதேச செயலகங்கள் ஊடாக மரக்கன்றுகளை விநியோ கிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முதல் கட்டமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு எமது நிழல் நிறுவனத்தினால் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏனைய பிரதேச செயலகங்களுக்கும் மேற்கொள்ள தீர்மானித்திருக்கின்றோம்.

இந்நிலை பொதுமக்கள் ஊடான மரக்கன்றுகளை நாட்டுகின்ற செயற்பாடுகள் இடம்பெற பெரிதும் உதவும். இது பொது மக்களுக்கான எதிர்கால விறகுத்தேவை களைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை யாக இனங்காணப்பட்டுள்ளது.

நிழல் நிறுவனத்திற்கான நிதியீட்டம் இதுவரை அங்கத்தவர்களால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது எமது உறுப்பினர்களில் செயலாளர், உப தலைவர் உட்பட எல்லோருமே சேவை அடிப்படையில் தொண்டர்களாக இணைந்து மரக்கன்றுகளின் உற்பத்திக்கு தன்னிச்சையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன. *சேவை செய்வதே ஆனந்தம்* என்பது அவர்களின் தாரக மந்திர மாகும்.

ஒவ்வொரு மாதமும் வருகின்ற போயாதினத்தில் மாதாந்தக்கூட்டம் நடைபெறுவதுடன் அதில் எடுக்கப்படும் முடிவுகள் அம்மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படும். எமது நிறுவனம் சேவைக்கென்றே உருவாக்கப்பட்டு மரக்கன்றுகளை வளர்த்து இலவசமாக வழங்கும். என்பதுடன் எதிர்காலத்தில் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு நிதியுதவி வழங்குவதனையும் இலக்காகக்கொண்டுள்ளது.

இதற்கான பூக்கன்றுகளை வளர்த்து விற்பனை செய்வதனோடு கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்தி வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக நிதியுதவி வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த இருக்கின்றோம்.

எமது நிறுவனத்திடமிருந்து மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளவிரும்பு வோர் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொண்டு தமது மரக்கன்று களுக்கான கோரிக்கைகளை எழுத்துமூலம் சமர்ப்பித்தல் வேண்டும். இக்கோரிக்கைக் கடிதங்கள் மாதாந்தக் கூட்டத்தில் பரிசிலீக்கப்பட்ட பின்னரே மரக்கன்றுகள் வழங்கும் முடிபு கூட்டத்தில் எடுக்கப்படும். எம்மிடம் மரக்கன்றுகளை விநியோகிக்க வாகன வசதியின்மையால் இயலுமானவரை மரக்கன்றுகளைப்பெறுவோர் எம்மிடம் மரங்களை சேகரித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**க.தேவராஜா**
தலைவர்/நிழல் நிறுவனம்,
பீடாதிபதி/முகாமைத்துவ வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

சிறுதொகை சிறுதொகையாக இருப்பின் செயலாளர் தனது மோட்டார் சைக்கிள் மூலமாக அவற்கைக்கொண்டுசென்று ஒப்படைத்து வருகிறார். நீங்கள் மரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் போது பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டால் போதுமானதாகும்.

*க.தேவராஜா, தலைவர்/நிழல் நிறுவனம், கோண்டாவில் மேற்கு , கோண்டாவில்.*

*சி.சோமசுந்தரம் , செயலாளர்/ நிழல் நிறுவனம், முத்துத்தம்பி ஒழுங்கை, மானிப்பாய்.*

மேற்கூறிய முகவரிகளுடன் நேரடியாகவோ அல்லது தபால்கள் மூலமோ தொடர்பு கொண்டால் மரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பொதுமக்களும் பொது நிறுவனங்களும் எமக்கு வழங்கும் ஆதரவே நிழல் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அதனூடான சேவைக்கும் வகை செய்யும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

# தீவிரவாதிகள் விடயத்தில் பாகிஸ்தான் பிடிவாதம்; போர் தொடுக்க இந்திய இராணுவம் தயார் நிலையில்

## 120 நாடுகளுக்கு விளக்க பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் விசேட கூட்டம் இன்று

(புதுடில்லி)

மும்பையில் தாக்குதல் நடத்தியது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தான் என்று உறுதி செய்யப்பட்டபோதிலும் பாகிஸ்தான் அதைத் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இதற்கான ஆதாரம் இல்லை என்று அந்நாடு கூறுகிறது.பாகிஸ்தானில் இருந்தபடி இந்தியாவுக்கு எதிராக செயற்படும் தீவிரவாத இயக்கத்தலைவர்கள் சிலரைக் கைதுசெய்வதாக அந்நாட்டு இராணுவம் முதலில் அறிவித்தது. இப்போது அவர்கள் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கின்றது.

இதன் மூலம் பாகிஸ்தான்,தீவிரவாதிகளை ஒடுக்குவது போல நாடகமாடி இந்தியாவை



பாகிஸ்தான் எல்லையில் இந்திய இராணுவம்...

ஏமாற்றி இருப்பது அம்பலமாகியுள்ளது.

இதனால் இந்தியா கடும் அதிருப்தியில் உள்ளது. பாகிஸ்தானுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் என்ற நிலைக்கு இந்தியா வந்துள்ளது.

மும்பை மீது தாக்குதல் நடத்தியதுமே பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்த இந்தியா தயாரானது. ஆனால் அப்போது அமெரிக்கா தலையிட்டு சமாதானப்படுத்தியதால் இந்தியா அமைதி காத்தது. ஆனால் அமெரிக்கா சொல்லுக்கும் பாகிஸ்தானில் மரியாதை இல்லை என்று தெரிந்ததும் இந்தியா உசார் அடைந்துள்ளது.

பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத முகாம்களை விமானம் மூலம் குண்டு வீசி அழிப்பது,இதைத்தொடர்ந்து போர் ஏற்பட்டால் அதையும் சந்திப்பது என்ற முடிவுக்கு இந்தியா வந்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் உயர்மட்டப்பாதுகாப்புக் கூட்டத்தை கூட்டினார். இக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோணி, வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணன் முப்பண்டைத் தளபதிகள் கலந்து கொண்டனர்.

முதலில் கூட்டம் பிரதமர் வீட்டில் நடந்தது. 2.மணி நேரம் அங்கு ஆலோசனை நடத்தினார்கள்.பின்னர் கூட்டம் இராணுவதுறை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது. அங்குள்ள போர் விவாத அறையில் கூட்டம் நடந்தது. அங்கும் 2 மணிநேரம் ஆலோசித்தனர். எந்த முறையில் தாக்குதல் நடத்தலாம். அதன்



பின்விளைவுகள் எப்படி இருக்கும். அதை எப்படி சமாளிக்க வேண்டும் என்பதுபற்றி விரிவாக ஆலோசனை நடத்தியுள்ளனர்.

மிக முக்கியமான நேரங்களில் மட்டுமே போர் விவாத அறையில் ஆலோசனை நடத்துவது வழக்கம். எனவே, போர்த்திட்டத்தை முன் வைத்துத்தான் இந்தக்கூட்டம் நடந்துள்ளதாக தெரிகிறது.

கூட்டத்தில் என்ன விவாதிக்கப்பட்டது என்ற விபரங்களை வெளியே தெரியவரவில்லை. முப்படைவீரர்களுக்கு வருகிற ஏப்ரல் மாதம் வரை 4 மாதத்திற்கு விடுமுறை யை இரத்துச் செய்வது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முப்படைகளையும் முழுமையாக தயாராக இருக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது. பாகிஸ்தான் எல்லையிலும் இராணுவம் உசார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளது. எனவே எந்த நேரத்திலும் போர் மூளலாம் என்ற பதட்டமான சூழ் நிலை உருவாகி இருக்கிறது.

காஸ்மீர் எல்லையை ஒட்டி 12 இடங்களுக்கு மேல் தீவிரவாத பயிற்சி முகாம்கள் இருப்பதை இந்திய உழவுத்துறை கண்டுபிடித்துள்ளது. அவற்றின் மீது முதலில் தாக்குதல் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமான இடங்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் படை வந்து சேரும்படி தயார் நிலை யில் வைத்துள்ளனர். பீரங்கிப்படை , டாங்கிப் படை ஆகியவற்றை எல்லைக்கு அருகே நிறுத் தியுள்ளனர். மற்றஇடங்களில் இருக்கும் படைகளும்கள் எல்லைப் பகுதியை நோக்கி செல்கின் றனர்.

கடல்ஓரப்பகுதி முழுவதையும் கண் காணிக்க ரேடர்கள் பொருத்தப்பட்டுள்ளன. கடலோரப்பாதுகாப்பு படை ,எல்லைப் பாது காப்பு படையினர் தீவிரரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளனர். புதிய கப்பல்களும் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தியாவில் நிலைமைகளை விளக்க 120 நாடுகளின் தூதர்கள் கூட்டத்தை அவசரமாக கூட்டியுள்ளனர். இன்றும் நாளையும் இந்தக்கூட்டம் டில்லியில் நடக்கிறது.

இக்கூட்டத்தில் பிரதமர் மன் மோகன்சிங் மற்றும் மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள் . பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுக்க வேண் டியதன் அவசியம் பற்றி தூதர்களிடம் விளக் கப்படும் என்று தெரிகிறது. (5)

## உலகின் சக்தி வாய்ந்த மனிதர்கள் சோனியா, ஷாருக்கான் தெரிவு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் புகழ் பெற்ற நியூஸ்வீக் நாளிதழ் வெளியிட்டுள்ள உலகின் புகழ் பெற்ற மனிதர்கள் முதல் 50 பேர்கள் கொண்ட பட்டியலில் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாவும் புகழ்பெற்ற பாலிவூட் நடிகர் ஷாருக்கானும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப்பட்டியலில் முதல் இடம் பிடிப்பவர் அமெரிக்காவின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பராக் ஒபாமாஆவார்.

இப்பட்டியலில் சோனியா 17ஆவது இடத்தையும் ஷாருக்கான் 41ஆவதுஇடத்தையும் பிடித்துள்ளனர். காங்கிரஸ் கட்சி இந்தியாவின் மிக வலிமையான கட்சி என்றும் இக் கட்சி ஆட்சிக்கு வந்தால் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா விளங்கும் என் றும் சோனியா அதன் ராணி எனவும் இப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. மேலும் இப்பட்டியலில் சீன அதிபர் ஹுஜின்டோவ், இங்கிலாந்து பிரதமர் கார்டன் பிரவுன் போன்றவர்களும் இடம்பிடித்துள்ளனர். (5)

# பாகிஸ்தான் ஜனாதிபதி ஆக நவாஸ் செரீப்பிற்கு ஆதரவு

## ஆய்வில் தகவல்

பாகிஸ்தானில் ஆசிப் அலி சர்தாரிக்குப் பதில் நவாஸ் செரீப்பே ஜனாதிபதியாக வேண்டுமென 59சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். 19 சதவீதம் பேர் மட்டுமே சர்தாரிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். சர்தாரியின் செயற்பாடுகள் திருப்தி இல்லை என்று 63 சதவீதம் பேரும் திருப்தியாக இருப்பதாக 19 சதவீதம் பேரும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் பாகிஸ்தான் மக்களிடையே நடத்திய ஆய்வில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் தற்போது தவறான பாதையில் போய்க்கொண்டிருக்கிறது என்று 88சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.கடந்த காலங்களை விட பொருளாதார நிலைமை மோசமாக உள்ளதென்று 73 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.முக்கியமான பிரச்சினைகளில் இப்போதைய பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைமையிலான அரசின் செயற்பாடுகள் மோசமாக இருப்பதாக 76 சதவீதம் பேரும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதியின் செயற்பாடுகள் திருப்தியாக இல்லையென்று 67 சதவீதம் பேரும் கூறியுள்ளனர்.

நாடு எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை கையாள்வதில் நவாஸ் செரீப் சிறந்தவர் என்று 31 சதவீதம் பேரும் சர்தாரி சிறந்தவர் என்றும் 8சதவீதம் பேரும் பர்வேஸ்முஷரப் சிறந்தவர் என்று3சதவீதம் பேரும் தெரிவித்துள்ளனர்.64 சதவீதம் பேர் பெனாசீர் பூட்டோவை விரும்புவதாகவும் 60சதவீதம் பேர் நவாஸ் செரீப்பை விரும்புவதாகவும்கூறியுள்ள நிலையில் 65 சதவீதம் பேர் சர்தாரியை விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.. (5)

# அகதிகளாக இராமேஸ்வரம் வந்த சிங்களத் தம்பதி

(இராமேஸ்வரம்)

இலங்கையில் இருந்து தனுஷ்கோடிக்கு அகதிகளோடு வந்த சிங்களத் தம்பதி,இந்தியா அடைக்கலம் தரவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை மன்னாரில் இருந்து 7 பெண்கள், 6குழந்தைகள் உட்பட 21 அகதிகள் தனுஷ் கோடி அரிச்சல் முனைக் கடற்கரைக்கு வியாழக்கிழமை படகில் வந்தனர்.

இவர்களோடு இலங்கை மகரகம பகுதியைச் சேர்ந்த துவாரா சந்தான (30 வயது) கொழும்பு அருகே களுவத்தை நகரைச் சேர்ந்த சாருகா தில்கானி (17 வயது) தம்பதியினர் வந்தனர்.

தனுஷ்கோடி காவல்நிலையத்தில் கியூப் பிரிவு பொலிஸார், உள்ளூர் பொலிஸார் விசாரணை நடத்தி மண்டபம் அகதி முகாமுக்கு அவர்களை அனுப்பி வைத்தனர்.

காதலித்து மணந்துகொண்ட நாங்கள் பெற்றோர் எமது திருமணத்தை ஏற்றுக் கொள்ளாததால் வவுனியாவில் உள்ள தமிழ் நண்பரான வசந்தமாலாவீட்டில் தங்கியிருந்தோம். அப்பகுதியில் தற்போது தீவிரமாக போர் நடந்து வருகிறது .

இதனால் அகதிகளோடு சேர்ந்து இராமேஸ்வரத்திற்கு வந்தோம் .எங்களுக்கு அடைக்கலம் அழிக்க வேண்டும் என அத்தம்பதி வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5)

# பதவியிலிருந்து விலகமாட்டேன்; அதிபர் முகாபே பிடிவாதம்

(ஹராரே)

சிம்பாப்வே அதிபர் ரொபேர்ட் முகாபே பல்வேறு தில்லுமுல்லுகளைச் செய்து தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டதாக எதிர்க்கட் சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந் நிலையில் அந்நாட்டில் பரவியுள்ள கொலரா நோயால் கடந்த 3 மாதங்களில் மட்டும் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்டோர் பலியாகி விட்டனர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதனால் சர்வதேச நாடுகள் முகாபே பதவி விலகவேண்டும் என்று தீவிரமாக வற் புறுத்தி வருகின்றன.

எனினும், சிம்பாப்வே எனக்குத்தான் சொந்தம். எனவே, அதிபர் பதவியில் இருந்து விலகுவேன் என்ற பேச்சுக்கே இடமில்லை. வேண்டுமென்றால் எதிர்க்கட்சி தலைவருக்கு பிரதமர் பதவி தரத் தயாராக இருக்கிறேன்



என்று முகாபே கூறுகிறார்.

ஆனால் முகாபேயின் இந்தக் கோரிக்கையை ஏற்க எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன் டிவாங்கிரை மறுத்துவிட்டார். ஆளும் கட்சியினரால் கடத்தப்பட்ட எங்களது 40 தலைவர்களையும் விடுவிக்காதவரை சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அவர் கூறியுள்ளார். (5)

# தேசிய பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை முடிவுகள்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

*(சனிக்கிழமை தொடர்ச்சி)*

ரி.வினோதினி-சுன்னாகம் தெற்கு (90), கே.கோமதி-சாவகச்சேரி (90), எஸ்.செல்வ மலர்-புலோலி (90), கே. கிரீசன்-கொக்குவில் (90), ஆர்.வாசுகி-மட்டுவில் கிழக்கு (90), ஆர். அனுஷா-கோண்டாவில் மேற்கு (90), பி. சுதர்சன்-இணுவில் மேற்கு (90), டி.ஆர். பிலிப்-பாசையூர் (90), எஸ். செல்வகுமார்-இடைக்காடு (90), கே.நடேஸ்வரன்-சாவகச்சேரி (90), பி.கிருபாகிருஷ்ணன்-இணுவில் மேற்கு (90), எஸ். ஸ்ரீகாந்தன்-நாவலர் வீதி, யாழ்ப்பாணம்(90), வை.தனுஷாந்தினி-ஆனைப்பந்தி (90), கே.சங்கீதா-வைரவப்புளியங்குளம் (90), ஜே. ஜெயரட்ணம்-இணுவில் மேற்கு (90).

பி.சுரேஷ்குமார்-உடுப்பிட்டி (90), பி.பொபிதா-வல்வெட்டித்துறை(90), எஸ். லோஜிதா-சாவகச்சேரி வடக்கு(90), எல்.வி. ஜெயதிலக்-வேம்படி வீதி.யாழ்ப்பாணம்(90), ரி.தர்சினி-கொக்குவில்கிழக்கு (90), ரி.தாரணி-கோண்டாவில் மேற்கு(90), ரி. தமயந்தி-கோண்டாவில்(90), வை. விமலன்- கல்வியங்காடு(90), பி.பாலசுப்பிரமணியம்-பண்டத்தரிப்பு-(90), ஆர். ராஜகோபால்-சங்கானை (90), எ. பேகஸ்வின்சென்ட்-ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம் (90), கே. மரிய நியூமன்-உயிலங்குளம்(90), எம். சர்மிலா-நானாட்டான்(90), எஸ் . சாம்பவி-சாஸ்திரி கூழாங்குளம்-(90).

கே. வைதேகி-அலம்பில் (90), எஸ். மீரா-வைரவப்புளியங்குளம் (90), ஆர். நிர்மலா தேவி-நெலுக்குளம் (90), எம். அனு கரன்-இரத்தினபுரம்(90),எ.சந்திரிக்கா- வட்டக்கச்சி (90),கே. முரளிதரன்- வைரவப்புளியங்குளம் (90), வி. மிதுலா-நெலுக்குளம் (90), ரி. சந்திரசேகரன்-நாகர் கோயில் தெற்கு (90),கே. வைகுந்தராஜா-புலோலி தென் மேற்கு(90),என்.மோகநேசன்-கோப்பாய் தெற்கு(90), ரி.சூரியவதனா-சிறுப்பிட்டி மேற்கு (90), என். சதீஸ்குமார்-கோண்டாவில் வடக்கு(90),வை.மாறன்-சாவகச்சேரி (90), எ. கஜனி-ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (90),எம். ஜெயகலா-புலோலி மேற்கு (90), எஸ். கமலலோஜினி-கலட்டி, யாழ்ப்பாணம் (90), எ.அன்ரனி-யாழ்ப்பாணம் (90).

எஸ்.உதயகுமாரி-புத்தூர் மேற்கு (90), எஸ். மகிந்தன்-இணுவில் மேற்கு (90), ஜி.அனுராகவன்-அல்வாய் வடக்கு (90), பி.ரஞ்சினி-சங்கத்தானை(90) ,கே. சிவரூபன்-குடியிருப்பு வவுனியா(90), ரி. வாமதேவன்-மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம் (90), எ.இராமலிங்கம்-சுழிபுரம் கிழக்கு(90), என். கரன்-வவுனியா, ஜி.பிரதீபன்-அரியாலை (90), ரி.சுரேக்கா-சாவகச்சேரி (90), எஸ். சுஜாதா-அரியாலை (90), பி.வாசுதேவன்-திருநெல்வேலி வடக்கு (90),எஸ். தயாளினி-சங்கானை(90),எஸ்.காமினி-பிரதான வீதி யாழ்ப்பாணம் (90), எஸ். தனுஷா -சுதுமலை வடக்கு(90),ஜே.என்.டி.டலிமா-பேசாலை மன்னார் (90), ஆர். சிவரஞ்சன்-வவுனியா (90).

எம்.வின்ஸ்ரன்சேர்ச்சில் -கல்மடு (90), எஸ். சங்கீபன்-திருநாவற்குளம் (90), என். சியாமளா-கோவில் புதுக்குளம் (90), வி. பார்த்தீபன்-சாஸ்திரி கூழாங் குளம் (90),கே. சந்திரபவன்-ஜெயபுரம் வடக்கு(90),வி.ராதிகா-மானிப்பாய் மேற்கு(90),எஸ். ஜெகநாதன்-உக்கிளாங்குளம் (90), எம்.எச். ஜசிலா-கம்மாந்தறை (90),என். யசோதா-கிளிநொச்சி (90),வி.ரட்நாயகம்-மல்லாகம் (88), எ. தாமரைச் செல்வி-பண்டத்தரிப்பு (88), எஸ். மிகாயதர்சினி-சுண்டுக்குளி (88) , கே. பிறிம் றோஸ்-மத்தியூஸ்வீதி யாழ்ப்பாணம் (88), கே.கம்ஷானந்தி-கல்வியங்காடு (88).

ஆர்.ரமேஸ்-கொடிகாமம்(88),கே.வித்தியா-புத்தூர் கிழக்கு (88), எஸ்.நதிபரன்-நல்லூர் வடக்கு (88), பி.சாமினி-சண்டிலிப்பாய் வடக்கு (88),ஜே.யோர்ச்-கொழும்புத்துறை (88),எ.கிருஷாந்தினி-சுண்டுக்குளி (88),எஸ்.திருக்குமரன்-உரும்பிராய் கிழக்கு (88) , ரி.யசோதரன்-உடுவில் தெற்கு (88), என்.செந்தில்நாதன்-உடுவில் கிழக்கு (88), எம்.பற்றீசியாதர்சினி-ஆனைக்கோட்டை (88), எ.கலைமதி-உடுவில் தெற்கு (88), டி.சர்மிளா-சங்கானை(88).

எஸ். நிருபா-சித்தங்கேணி (88), ஜி.சியாமளா-புத்தூர் கிழக்கு(88), பி.பார்த்தீபன்-அல்வாய் வடமேற்கு(88),ஆர்.ராஜி-வல்வெட்டித்துறை(88),ரி.ரஜீத ன்-ஆனைக்கோட்டை(88),எஸ்.பிருந்தா-நவக்கிரி (88), எ.குருநாதன்-கட்டைப்பிராய் (88), பி.செந்தில்குமார்-தாவடி தெற்கு(88), எ.சுறோமி-அல்வாய் தெற்கு(88), ரி.ஜெபசுதன் -மட்டுவில் வடக்கு(88), எஸ்.மரியகோறட்டி குரூஸ்-மன்னார் (88),பி.தவசீலன்-முள்ளியவளை (88), டி.என்.வத்சலா-பூவரசங்குளம் (88), சி.இராமநாதன்-சூசைப்பிள்ளையார்குளம் (88),ஜி.ஜெயந்தி-தர்மபுரம் (88), கே.மயூரநாதன்-இராமநாதபுரம் (88).

ஆர்.ஜெயமயூரன்-பண்டாரிக்குளம் (88), எஸ்.கிருஸ்ணகுமாரி-இணுவில் மேற்கு (88), என்.நாவேந்தன்-கோப்பாய் தெற்கு (88), எஸ்.சுஜீவா-சுன்னாகம் தெற்கு (88), வி. விஜேந்திரன்-அல்வாய் கிழக்கு(88), எஸ்.ரதிவதனி-சுழிபுரம் கிழக்கு (88).

கே.கீர்த்திராஜன்-உடுப்பிட்டி (88), ரி.துர்க்காஜினி-அல்வாய் கிழக்கு (88), ஆர். சுகந்தரூபி-நல்லூர் (88),ஆர்.காண்டீபன்-சுன்னாகம்(88), ஆர்.சிவகாமி-புலோலி தெற்கு(88),ஐ.பிரபாஜினி-இருபாலை (88), ரி.தேவகுமார்-புலோலி தெற்கு(88), ஜி.தர்சன்-மீசாலை வடக்கு (88).

ரி.இராமநாதன்-சித்தங்கேணி (88), ஜி.கவிதா-கரவெட்டி கிழக்கு (88), என். திருமகள்-இடைக்குறிச்சி வரணி (88), எஸ்.தயாபரன் -சுண்டுக்குளி(88), ஜே. றெபேக்கா-நவாலி தெற்கு(88), எஸ். தாரிணி-பருத்தித்துறை (88), கே.விஜிதா-வட்டுக்கோட்டை(88).

எஸ். ஞானரூபினி-குப்பிளான்(88) ,சி.எ.சி.தர்சினி-உடுவில் (88),ஆர்.பிரகாஷ்-கோப்பாய் தெற்கு (88), என்.கபிலரூபன்-உரும்பிராய் தெற்கு (88), ரி.கிருத்திகா-நல்லூர்(88), ரி.பஞ்செக்-பேசாலை (88), எம்.சிவரஞ்சினி-ஒட்டிசுட்டான் (88), கே.சுகிதா-பண்டாரிக்குளம்(88), ஆர்.குபேசன்-பண்டாரிக்குளம்(88), வி.ரவி-தோணிக்கல் (88).

எஸ்.நிமலன்-கனகபுரம்(88), கே. பிரதீபுன்-மல்லாகம் (88), ரி.பிரபாகரன்-வைரவப்புளியங்குளம் (88), என்.ஜெயமோகன்-உரும்பிராய் தெற்கு (88).

என்.விபுலன்-அச்சுவேலி வடக்கு (86), ரி.சுதர்சினி-மானிப்பாய் வடக்கு (86), கே. செல்வராணி-சங்கத்தானை (86), கே.கந்தவேல்-மட்டுவில் தெற்கு(86), ரி.தயாளினி-உடுவில் தெற்கு (86), ஜி.சகிதன்-வரணி மத்தி (86), ஆர். வாசுகி- வடலியடைப்பு (86), வி.விஜயேந்திரன்-கந்தர்மடம் (86), வி. சுகந்தி-வடலியடைப்பு (86), எஸ்.ஜெயா-வட்டு வடக்கு(86), பி.தேனுகா-அல்வாய் வடக்கு (86), எஸ்.அருளேஸ்வரி-நல்லூர் வடக்கு (86), என்.எஸ்.டயஸ்-பேசாலை (86).

எஸ்.கே.சுபாஜினி-ஒட்டுசுட்டான் (86), ரி.சோபிதா-உக்கிளாங்குளம் (86), ஆர். சர்மிளா-தேக்கவத்தை (86), எஸ். ஜெயப்பிரியா-நெலுக்குளம் (86), எஸ். கமலதாஸ்-நெலுக்குளம் (86),ரி.செல்வ கஜானன்-கணேசபுரம்(86), எ.எ.ஜெயினுடீன்-வவுனியா (86).

எஸ்.அகிலன்-கச்சாய் வடக்கு (86), எஸ். கிருத்திகா-நல்லூர் தெற்கு(86), கே.சிவகணேசன்-புலோலி வடமேற்கு (86), கே. மாலினி- ஆவரங்கால் (86), ரி.கோணேஸ்வரன்-மீசாலை மேற்கு (86), கே.திலகேஸ்வரி-கோப்பாய் தெற்கு (86), ரி.ஜெயரூபி-தாவடி வடக்கு (86), ஜி.குகதர்சிகா-ஆனைக்கோட்டை (86),வி.சொரூபகாந்தி-திருநெல்வேலி (86).

ரி.ஸ்ரீகரன்-ஏழாலை மேற்கு (86), எஸ். சிவப்பிரியா-இணுவில் தெற்கு (86), ரி.பத்மரஞ்சினி-துன்னாலை வடக்கு (86), எ.சுகந்தி-நல்லூர் (86), எஸ்.ஸ்ரீதரன்-அல்வாய் வடமேற்கு(86), ரி.சிவராஜினி-உரும்பிராய் மேற்கு (86).

பி.கிருஸ்ணவேணி-சுதுமலை தெற்கு (86), சி.செல்வரதன்-கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்(86), எஸ்.துர்க்காம்பிகை-கரணவாய் மேற்கு(86),எஸ்.கஜானன்-இளவாலை (86),எம்.எம்.ஆர். குரூஸ்-நானாட்டான்(86), கே.சாந்திநிகேதா-வேப்பங்குளம் (86), எஸ். ஸ்ரீபிரியா-உக்கிளாங்குளம் (86), எ.எம். சௌந்தரநாயகி-பட்டாணிச்சூர் (86), எஸ். ராஜசிங்கம்- கணேசபுரம் (86). (தொடரும்)

# இலங்கையில் ஆறு வருடங்களில் 62,516 பேர் காணாமல் போயுள்ளனர்

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இலங்கையில் மொத்தமாக 62 ஆயிரத்து 516 பேர் காணாமல் போயிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

காணாமல் போனவர்களில் 25ஆயிரத்து 764 பேர் தொடர்ந்தும் எங்குள்ளார்கள் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் தெரியவரவில்லையென பொலிஸ் தலைமையகத்தின் அறிக்கைகள் மூலம் தெரியவருவதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 743 பேர் காணாமல் போயிருப்பதுடன், இவர்களில் 25 பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல்போன பெண்களில் 6 பேர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சடலமாக மீட்கப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் காணாமல் போனவர்களில் 2ஆயிரத்து 25 பேர் வீடு திரும்பியிருப்பதுடன், 2ஆயிரத்து 718 பேர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையெனவும் கூறப்படுகிறது.

பொலிஸ் தலைமையகத்தின் தகவலுக்கு அமைய கடந்த 6 வருட காலப்பகுதியில் 2004 ஆம் ஆண்டே கூடுதலானவர்கள் காணா மல் போயிருப்பதாகவும், அந்த ஆண்டில் 16ஆயிரத்து 98 பேர் காணாமல் போயிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

8ஆயிரத்து888 பேர் திரும்பியிருப்பதுடன் 7ஆயிரத்து 210பேர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையெனவும் கூறப்படுகிறது.

2005 ஆம் ஆண்டு 14 ஆயிரத்து 118 பேர் காணாமல் போனதுடன், அதில் 8ஆயிரத்து 544 பேர் கண்டுபிடிக்கப்பட்டதுடன், 5ஆயிரத்து 574 பேர் கண்டுபிடிக்கப்படவில்லையெனவும் பொலிஸ் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் திரும்பிவிட்டார்கள் எனக் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்ச்சியாக கூறிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (5)

# போக்குவரத்து சேவைகளுக்கு —புதிய கட்டண முறை—

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகள் உட்பட பயணிகள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கான கட்டண முறை யொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

புதிய கட்டண முறையை அறிமுகப்படுத்துவதற்கான முதற்கட்ட ஏற்பாடுகளை தற்போது மேற்கொண்டு வருவதாக ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அமல் குமாரகே குறிப்பிட்டார்.

இந்த அடிப்படையில் அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் புதிய கட்டண முறையை அறிமுகப்படுத்த முடியும் என ஆணைக் குழுவின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டார்.

பஸ் வண்டிகளின் தரம் மற்றும் கட்டணங்கள் தொடர்பாக ஆராயும் செயற்திட்டம் ஒன்றே தற்போது நடைமுறையில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிதாகத் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தில் முச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட போக்குவரத்து சேவையில் ஈடுபடும் ஏனைய வாகனங்களின் கட்டணமுறை தொடர்பான விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பஸ் வண்டிகள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கான கட்டணமுறை அறிமுகப்படுத்த முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (5,4)

# எஸ்.பி.திஸநாயக்கவுக்கு ‘நா காக்க’ அறிவுரை

மத்திய மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரான எஸ்.பி.திஸநாயக்கவுக்கு ஆசி வழங்கிய அஸ்கிரிய மகாநாயக்கர், “நா காக்க” வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தல் ஆணையகத்தால் வாக்காளர் பட்டியலில் இருந்து எஸ்.பி.திஸநாயக்க நீக்கப்பட்டிருந்தார்.இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்த எஸ்.பி. திஸநாயக்கவுக்கு சாதகமான தீர்ப்புக் கிடைத் தது.

எதிர்வரும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் எஸ்.பி.திஸநாயக்க, அஸ்கிரிய மகாநாயக்கரை நேரில் சந்தித்து ஆசி பெறச் சென்றார்.

அவருக்கு ஆசி வழங்கிய மகாநாயக்கர் உடுகம சிறி புத்தரகித்த தேரர், ‘நா காத்து’ செயற்படுமாறு அறிவுரை வழங்கி அனுப்பி வைத்துள்ளார். (5)

# பிரித்தானியாவில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களுக்கு கிடைத்துள்ள இனிக்கும் செய்தி



ஆர்.யூ.பாலமுருகன்

பிரித்தானியாவை நினைத்தவுடன் நம் நினைவுக்கு வருவது ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் தான். ஷேக்ஸ்பியர் பிறந்த மண்ணில் தரமான கல்வியை நூற்றாண்டுக்கும் மேலாக அளித்துவரும் பாரம்பரிய பெருமையை பிரித்தானியா பெற்றுள்ளதே இதற்குக் காரணம்.

அயல் நாட்டில் தரமான கல்வி பயில வேண்டும் எனில், பிரித்தானியாவை தேர்ந் தெடுக்குமாறு, கல்வியியல் நிபுணர்கள் பரிந்துரை செய்கின்றனர். தெற்காசியா வைச் சேர்ந்த மாணவர்கள் தான் பிரித்தா னியாவில் அதிகளவில் கல்வி பயின்று வருகின்றனர். இங்கு கல்வி பயில்வதன் மூலம் சர்வதேச அறிவைப்பெறுவதுடன் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் பிற நாட்டு மாணவர்களைச் சந்திக்கும் அனுப வமும் கிடைக்கிறது.

மேலும் விருப்பமான பாடத்தை தேர்வு செய்வதுடன் உலகத்தரம் வாய்ந்த கல்வி யைப் பெறும் வாய்ப்பும் கிடைக்கிறது. அப் லைட் மற்றும் பியோர் சயின்ஸ் ,எம்.பி.ஏ, பிசினஸ்,பைனான்ஸ் அன்ட் அட்மின்ஸ்டி ரேட்டிவ் ஸ்டடீஸ்,மெடிஸின்,லீகல் ஸ்டடீஸ் கொமினிக்கேஷன்ஸ்,டூரிசம்,கொம்பியூட்டர் அன் மெத்தமேட்டிக்ஸ்,கிரியேட்டிவ் ஆர்ட்ஸ், மியூசிக் அண்ட் லிட்ரேச்சர் போன்ற பல்வேறு பிரிவுகளில் பிரித்தானிய கல்வி நிறுவனங் கள் பட்டப்படிப்புகளை அளித்து வருகின் றன. பிரித்தானியாவில் பெறும் பட்டங்களுக்கு உலகம் முழுவதும் மதிப்பு இருக்கிறது.

பிரித்தானியாவில் பின்பற்றப்படும் கல்வித்தரத்தை அடிப்படையாகக் கொண்டு பிற நாடுகளும் ,உயர் கல்வித்தரத்தை தற் போது மேம்படுத்தி வருகின்றன. அதனால் பிரித்தானியாவில் உள்ள புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பெறும் பட்டங்கள் வாழ்க்கையில் உயர பெரிதும் பயன்படுகின்றன.



பிரித்தானியாவில் கல்வி பயில்வதில் கிடைக்கும் மிகப்பெரிய சாதகமான அம்சம் என்னவெனில் அனைத்து முதுகலைப் பட்டங் களும் ஓராண்டுப்படிப்பாகும்.

இதனால் , நேரம் மிச்சமாவதுடன் , செல வும் கணிசமாகக்குறைகின்றது. பிற நாடுக ளில் பல்கலைக்கழகங்களில் இது போன்ற வசதி கிடையாது.

அதேபோல பிரித்தானியா பல்கலைக் கழகங்களில் சேர்வதும் எளிதான நடை முறையாக இருக்கின்றது.ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மாணவர் சேர்க்கை ஆரம்பமாகின்றது.

அதனால் தற்போதே விண்ணப்பங் களை அனுப்பும் பணிகளைத் தொடங்கி விடுவது நல்லது. பிரித்தானியா அரசாங்கம், தற்போது விசா நடைமுறைகளை எளிமைப் படுத்தியுள்ளது. சர்வதேச மாணவர்கள் , மிகவும் எளிதாக விசா பெறும் வகையில் விதிமுறைகள் மாற்றப்பட்டுள்ளன. அதேபோல் பெரும்பாலான அயல் நாட்டு மாணவர்க ளுக்கு கல்வி உதவித்தொகையும் விசா வழங்கப்படும் போதே உறுதி செய்யப்படு கிறது. இதன் மூலம் ரீயூசன் கட்டணம் மற்றும் தங்கும் செலவுகளை மாணவர்கள் சமாளித் துக்கொள்ளலாம்.

பிரித்தானியாவில் பெரும்பாலான பல்க லைக் கழகங்களில் வளாகங்களுக்குள் ளேயே அயல் நாட்டு மாணவர்கள், தங்கு வதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகின்றன. குறைந்த பட்சம் ,முதல் ஆண்டில் இருந்தே இந்த வசதி கிடைக்குமாறு பார்த்துக் கொள் ளப்படுகிறது. அதேநேரத்தில்,பிற மாணவர்க ளுடன் சேர்ந்து வீடு எடுத்து தங்குவதற்கும் அனுமதி அளிக்கப்படுகின்றது.

மேலும், கல்வியை முடித்த பின்னரும் கூட பிரித்தானியாவில் தங்கி வேலை தேடுவதற்கும் வாய்ப்பு அளிக்கப்படுகின் றது.

அண்மையில் கிடைத்த இனிக்கும் செய்தி என்னவெனில் வரும் ஜனவரி 30ஆம் திகதி முதல் ,பிரித்தானியாவில் கல்வி பயின்ற அயல் நாட்டு மாணவர்கள்,அடுக்கு-1 திட்டத் தின் கீழ் இரண்டு ஆண்டுகள் தங்கி பணி யாற்ற புள்ளிகள் அடிப்படையில் விண்ணப் பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் கல்வி பயிலவும் பணி யாற்றவும் விரும்புபவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.


கல்வித்தகுதி ,முன்பு பெற்ற ஊதியம், வயது மற்றும் பிரித்தானிய அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் புள்ளிகள் அளிக்கப்படுகின்றன.

அடுக்கு-1 திட்டத்தில் உள்ள மற்றொரு சிறப்பம்சம் என்னவெனில் சர்வதேச பட்ட தாரி திட்டத்தின் கீழ் முன்பு அனுமதிக்கப்பட்ட கால அளவை விட இரண்டு மடங்கு காலம் பிரித்தானியாவில் தங்கலாம். அதேபோல் அயல் நாட்டுமாணவர்கள் பிரித்தானியா வில் வேலை தேட,வேலை அனுமதி அல்லது ஸ்பொன்சரோ தேவையில்லை. இந்தப் புதிய முறை எளிமையாக இருப்பதுடன் பிரித்தானியாவில் பணியாற்ற விரும்புபவர் களை விரும்பி அழைக்கும் முறையாகவும் உள்ளது.

அதனால் ,வாழ்க்கையில் மிகச்சிறந்த அனுபவத்தையும் வாழ்க்கைத்தரத்தையும் பெற கல்வி பயில்வதற்கு பிரித்தானியாவை தேர்ந்தெடுப்பது நல்லது என கல்வியியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.




## தேவையற்ற புரோகிராம்களை நீக்க உதவும் ஒட்டோமிக் கிளீனர்




உங்கள் வீட்டில் எலிகளையும், பெரிய பூச்சிகளையும் வாழவிடுவீர்களா? இவை என்ன உங்களுக்கு மரணம் தரும் வகையில் காயப்படுத்தப் போகின்றன வா? இல்லையே ! இருந்தாலும் ஏன் விரட்டுகிறோம்.நம் அன்றாட வாழ்க் கைக்கு சிறு சிறு தொல்லைகள் தருகின் றன என்பதால் தானே. அதேபோல் தான் நம் கொம்பியூட்டரில் தேவை இல்லாமல் தங்கும் புரோகிராம்கள்.

இன்டர்நெட் பிரவுசிங் செய்திடு கையில் உருவாகும் கேஷ்பைல்கள், கேம்ஸ் விளையாடி முடித்த பின் சிஸ்டத்தில் தேங்கும் பைல்கள், போட் டோ மற்றும் வீடியோப் பைல்களைக் கொண்டு மூவிகளை அமைக்கையில் இரட்டிப்பாகும் பாடல் மற்றும் படக் காட்சி பைல்கள் எனப் பலவகையான பைல்கள் தேவையில்லாமல் ஹார்ட் டிஸ்கில் இடம்பிடிக்கின்றன.

இடம்பிடிப்பது மட்டுமன்றி சிஸ் டம் இயங்குவதையும் இவை மந்த மாக்குகின்றன.

### கணனி உலகம்

இவற்றை எப்படித்தான் நீக்குவது? எவை எவை நீக்கப்பட வேண்டியவை என்று கண்ட றிவது? இதற்கான வழிகளை மிக எளிமை யாகவும் எளிதாகவும் தருகிறது. ஒட்டோமிக் கிளீனர் என்னும் புரோகிாம். இதனைப் பெற நீங்கள் http:/www.ghacks-net/2008/09/30/atomic-cleaner-cleans-up-game-leftovers/ என்ற தளத்தை அணு கலாம்.

# இணையத்தளத்தின் அடிப்படை அம்சங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

**புதிதாய் என்ன?**

அடிக்கடி புதிய தகவல்களைக் கொண்டு உங்கள் இணையத் தளத்தை புதுப்பித்துக் கொண்டிருங்கள். அதற்காக அடியோடு அதனை மாற்ற வேண்டியதில்லை. சிறிய மாற்றங்கள் அவ்வப்போது இருப்பது உங் கள் தளத்திற்கு வருபவர்களின் எண்ணிக் கையைக் கூடுதலாக்கும்.

**தகவல்கள்**

உங்களின் தனிப்பட்ட தளங்களில் தகவல்கள் நிறைய இருக்க வேண்டும். உங்க ளின் சிறிய நிறுவனம் அல்லது சேவை குறித்து வெப்சைட் இருந்தால் அந்தத் தயாரிப்பு பொருள் அல்லது சேவை பற்றி மட்டுமின்றி உங்கள் நிறுவனம் அதன் நிர்வாகம் மற்றும் கட்டமைப்புப் பற்றியும் நிறைய தகவல்களை நீங்கள் தரலாம்.

**மேம்பாடு**

உங்கள்நிறுவனம்போல,உங்கள்அமைப்பு போல இயங்கும் மற்றவற்றின் இணையத் தளங்களையும் நீங்கள் அடிக்கடி சென்று பார்த்து அவர்கள் செய்திடும் மாற்றங்கள், மேம்படுத்தும் தகவல்கள் ஆகியவற்றையும் கண்டறிந்து ஆய்வுசெய்து உங்கள் தளத் தையும் அதேபோல இல்லாமல் அதைவிடச் செறிவாக மேம்படுத்துங்கள்.

**சோதனை**

உங்கள் இணையத்தளம் உங்களுக்குப் பிடித்த பிரோசரில் மட்டும் சரியாக இயங்கக் கூடாது. மக்கள் பயன்படுத்தும் அனைத்தும் பிரோசர்களிலும் மிகச் சரியாக இயங்க வேண் டும். அப்போதுதான் அனைத்துத் தரப்பின ரையும் உங்களால் கவரமுடியும். அத்துடன்

### இவ்வார இணையத்தளம்

பல்வேறு ரெசல்யூசன் அமைப்பிலும் உங்கள் இணையத்தளத்தைச் சோதனை செய்து பார்த் திட வேண்டும்.வெவ்வேறு அப்பட்டிங் சிஸ்டத் திலும் இயக்கிப் பார்த்திட வேண்டும்.

**படங்கள்**

நீங்கள் பதித்துள்ள படங்கள் சரியாக இறங்குகின்றனவா,நீங்கள் எதிர்பார்க்கும் தோற்றத்தைத் தருகின்றனவா என்பதை அடிக்கடி நீங்கள் சோதித்து அறிய வேண்டும். வெவ்வேறு வேகத்தில் இயங்கும் இணைய இணைப்புக்களில் இந்தப் படங்கள் எப்படி இறங்கி இயங்குகின்றன என்று சோதித்துப் பார்க்கவேண்டும்.

**சொல்லும் மொழி**

உங்கள் மொழி நடையை ஸ்டைலாக அமைப்பதற்கு முன் அதில் எழுத்து மற்றும் இலக்கணப் பிழை இல்லாமல் இருப்பதனை ஒன்றுக்குப் பல முறை உறுதி செய்து கொள் ளுங்கள். தமிழ்மொழியில் உங்கள் தளத்தில் தகவல்கள் தரப்பட்டால் அந்த எழுத்துரு வினை டவுண்லோட் செய்துகொள்ள வசதி செய்து தரவேண்டும். அந்த வசதி உள்ளது என்பதனை ஒரு ஜேபெக் பட பைலாக வோ அல்லது ஆங்கிலத்திலோ அமைக்க லாம் அல்லது தளம் முழுவதையும் யூனி கோட் எழுத்துருவில் அமைக்கலாம். இது டவுண் லோட் செய்திடும் வேலையை மிச்சமாக்கும்.

**எழுத்து வகை**

அனைவருக்கும் தெரிந்த எழுத்து வகை களில் உங்கள் தகவல் தளத்தை அமைப்பது நல்லது.அப்போது தான் பார்ப்பவர்களுக்குத் தாங்கள் பழக்கப்பட்ட தளம் போல உங்கள் தளம் காட்சியளிக்கும்.

**எளிதான தாவல்**

உங்கள் தளத்தின் முகப்புப் பக்கத்திலி ருந்து தகவல்களுக்காக நேயரை மற்ற தளத்திற்கு இழுப்பது மிக எளிதான ஒன்றாக இருக்கவேண்டும். அவை உடனடியாக இறக்கம் செய்யப்படும் வகையில் தரப்பட வேண்டும். எந்தப் பக்கத்தில் இருந்தாலும் பிற பக்கங்களுக்குச் செல்வதற்கு எளிதான வழி அமைத்துத் தரப்படவேண்டும்.

**விளம்பரம்**

உங்கள் இணையத்தளம் மூலம் பணம் சம்பாதிப்பதற்காக விளம்பரங்களுக்கு இடம் தருவது தவறில்லை. ஆனால் அவை அளவுக்கு மீறி இடம்பெறக்கூடாது இரண்டு விளம்பரங்களுக்கு மேல் இருப்பது சகித்துக் கொள்ள முடியாததாக இருக்கும்.

**பாதுகாப்பு**

இணையத்தளத்தின் மிக முக்கியமான ஓர் அம்சம் அதன் பாதுகாப்பு. உங்கள் இணையத்தளத்தினுள் யாரும் நுழைய முடியாதபடி பாதுகாப்பு வலையங்களை அமைத்து அவற்றை அடிக்கடி மாற்றி மாற்றி அமைத்துவிட வேண்டும். ◆

கடவுள் ஒவ்வொரு பறவைக்கும் உணவளிக்கி றான் ஆனால் அதை அவன் கூட்டிற்குள் வீசுவ தில்லை.

~ டென்மார்க்

வலம்புரி

## மரக்கறிச் செய்கையை விரைவுபடுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்

யாழ்.மாவட்டத்தில் நிலவும் மரக்கறிகளின் தட்டுப்பாட்டினால் மக்களின் போசாக்கு நிலை மிக மோசமாகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழை, புயல் காரணமாக விவசாயச் செய்கை முழுமையாகப் பாதிப்படைய அதன் உடனடித் தாக்கம் விவசாயச் சந்தைகள் வெறிச்சோடிப்போயுள்ளன.

மரக்கறிகளின் தட்டுப்பாட்டை நீக்க உரிய நடவடிக்கை தேவை என இப்பகுதியில் இதற்கு முன்னரும் குறிப்பிட்டிருந்தோம்.

மரக்கறிகளின் தட்டுப்பாட்டினால் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பானது பொதுமக்களால் ஈடு கொடுக்கக் கூடியதல்ல.

எனவே இது விடயத்தில் விவசாயத் திணைக்களங்கள் விரைவாக களத்தில் குதித்து மரக்கறிச் செய்கையில் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்படுகின்ற தட்டுப்பாட்டை உடனடியாக நீக்குவதற்கு இருக்கக்கூடிய ஒரேவழி தென்பகுதியில் இருந்து மரக்கறிகளை இங்கு கொண்டு வருவதாகும்.

ஏனெனில் விவசாயப் பொருட்களின் உற்பத்திப் பொருட்களைப் பொறுத்தவரை அவற்றின் விளைவுக்கு ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் தேவை.

எனவே ஒரு புறத்தில் மரக்கறித் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்குவதற்குத் தென்பகுதியில் இருந்து மரக்கறிகளைக் கொண்டுவரும் அதே நேரம், உள்ளூர் விவசாயிகளை மரக்கறிச் செய்கைக்கு ஊக்குவிப்பது கட்டாயமானதாகும்.

மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டு வெள்ளத்திற்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு சோகத்தில் இருக்கும் விவசாயிகள் மீண்டும் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவர் என எதிர்பார்க்க முடியாது.

எனவே அவர்களை உற்சாகப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

அத்தகையதோர் நடவடிக்கையின் முதற்படி வெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவுகளுக்கான நட்டஈட்டை வழங்கும் உத்தரவாதமாகவே இருக்கும். வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதன் மூலம் விவசாயிகளை மரக்கறிச் செய்கையில் ஊக்குவிக்க முடியும்.

அதேநேரம் மரக்கறிச் செய்கைக்குத் தேவையான நாற்றுகள், விதைகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதில் விவசாயத் திணைக்களங்கள் விரைந்து செயற்படவேண்டும்.

குறுகிய அறுவடைக்காலத்தையுடைய மரக்கறி விதைகளை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மிக மோசமான மரக்கறித் தட்டுப்பாட்டை நீக்க முடியும்.

எதுவாயினும் உடனடித் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு அரசிடமே உண்டு.

# க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையைக் கூட ஒழுங்காக நடத்த முடியாத அரசாங்கம்

# ஜே.வி.பி. தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பெற்றோல் விலையை உடனே குறைக்க வேண்டும் என்று மஹிந்த அரசை ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது,

தற்போதைய எரிபொருள் சிக்கலுக்கு மஹிந்த அரசுதான் காரணமாகும். உடனே பெற்றோல் விலையைக் குறைக்க வேண்டும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாதுபோனால் மேலதிகமான பிரச்சினைகளை அது ஏற்படுத்தும்.

ஐக்கிய தேசிய கட்சியைத் தோற்கடிக்கவே மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை நாம் ஆதரித்தோம். ஆனால் சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியுமே இணைந்து ஐ.தே.க. வின் கொள்கைகளை தூக்கிப் பிடிக்கின்றன. மஹிந்த அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாத நிலையில் மக்களின் வாக்குகளை எப்படி சுதந்திரக் கூட்டமைப்பால் கோர முடியும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தேர் வைக் கூட ஒழுங்காக இந்த அரசாங்கத் தால் நடத்த முடியவில்லை . ஒவ்வொரு விடயத்திலும் அரசாங்கம் ஒழுங்கீனமாகவே உள்ளது. இந்த அரசாங்கம் விரைவில் கவிழும்.



ஏற்கனவே 3 ஆயிரம் மில்லியன் வீணாகிவிட்ட நிலையில் மிகின் ஏயர் நிறுவனத்துக்காக மேலும் 6 ஆயிரம் மில்லியன் செலவிடுவதால் என்ன பயன்? பெருந்தொகையான பணத்தை வீணடிப்பதை விட்டு மக்கள் நலத்திட்டங்களுக்கு அவற்றை பயன்படுத்த வேண்டும் என்றார் சோமவன்ச. (5)

# ஜீ. எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பாக இலங்கை -ஐரோப்பிய ஒன்றியம் சந்திப்பு

## அடுத்த மாதம் நடைபெறுகிறது

(கொழும்பு)

ஏற்றுமதி வரிச்சலுகையை ( ஜி.எஸ்.பி.பிளஸ்) மேலும் நீடிப்பது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் அடுத்த மாதம் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய வர்த்தக ஆணையாளர் கத்தரின் அஸ்ரோன் ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஏற்றுமதி வரிச்சலுகையை மேலும் நீடிப்பது தொடர்பாகவும் அதற்காக இலங்கை நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் சட்டங்களை இலங்கை அரசாங்கம் ஒழுங்கான முறையில் கடைப்பிடிக்கிறதா என்பது பற்றி விசாரணைகள் நடந்துவரும் நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளை சந்திக்கவேண்டும் என இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது.இதற்கமையவே அடுத்த மாதம் இந்த சந்திப்பு நடக்கவுள்ளது.

மேலும் மூன்று வருடங்களுக்கு ஏற்றுமதி சலுகையை நீடிப்பதற்கு இலங்கை நிறைவேற்றவேண்டிய கோரிக்கைகள் அடங்கிய ஆவணங்கள் மற்றும் சான்றுகளுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தலைமையிலான உயர்மட்டக்குழு பிரசல்ஸ் செல்லவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் மேலேகூறப்பட்ட சட்ட நடைமுறைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்தியுள்ளதா என்பது பற்றி கண்டிப்பான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

ஏற்றுமதி வரிச்சலுகையை மேலும் 3 வருடங்களுக்குள் நீடிப்பதற்கான கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளதா என்பதை ஆராயும் விசாரணைகளை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஒக்டோபர் மாதம் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# விடைத்தாள்கள் திருத்தும் பணி இம்மாதம் 31ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இம் மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. புதிய பாடத் திட்டத்திற் கமைவான விடைத்தாள்கள் முத லில் திருத்தப்படு மென பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் அநுர எதிரி சிங்க தெரிவித்துள்ளார்.

புதிய பாடத்திட்டதிற்கு அமை வான கணித பாட விடைத்தாள் தொடர்பாக ஆராயவென நியமிக் கப்பட்டுள்ள இரண்டு உயர்மட்ட குழுக்களின் அறிக்கைகள் அடுத்த இரண்டு வாரத்திற்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (5)

# சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நான்காம் ஆண்டு நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நான்காவது ஆண்டு நினைவு தினம் *இடர்களைக் குறைத்து மனித உரிமைகளைப் பாதுகாப்போம்* என்ற தொனிப்பொருள்களில் எதிர்வரும் 26ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தை நினைவு கூறும் வகையில் இலங்கையில் வருடந்தோறும் தேசிய பாதுகாப்புத் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த வருடத்திற்கான தேசிய பாதுகாப்புத்தினத்தை நாட ளாவியரீதியில் அனுஷ்டிப்பதற்கான விரிவான ஏற்பாடு களை அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான தேசிய வைபவம் 26ஆம் திகதி கண்டி தலதா மாளிகையில் சமய நிகழ்வுகளுடன் இடம்பெறவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங் களி லும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது உயிர் நீத்தவர்களை நினைவு கூறும் வகையில் 26ஆம் திகதி காலை 9.25 தொடக்கம் 9.27 வரை 2 நிமிடநேரம் மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப்படவேண்டும் என அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை சுனாமி ஆழிப்பேரலை அவலத்தின் 4ஆவது ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான பல்வேறு ஏற்பாடுகளை அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் மேற்கொண்டுவருகின்றன.(5-4)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

# பலவீனமே மரணம்



இந்த உலகில ஆகட்டும் வேறு எந்த உலகிலும் ஆகட்டும் , அதில் பல வீனங்களுக்கு இடமிலலை. பலவீனம் அடிமைத்தனத்திற்கே இட்டுச் செல்கிறது. உடல் மற்றும் மன சம்பந்தமான எல்லா வகை துயரங்களும் பலவீனத்தாலேயே விளைகின்றன. பலவீனமே மரணம். நம்மைச் சுற்றி லட்சக் கணக்கான நுண்ணுயிர்கள் உள்ளன. ஆனால் உடல் அவற்றை உள்ளே அனுமதிக்க ஆயத்தமா க,பலவீனமாக இல்லாமல் அவை நமக்குத் துன்பம் தர முடியாது.

துன்பந்தரும் நுண்ணுயிர்கள் நம்மைச் சுற்றிக் கோடிக்கணக்காக மிதந்து கொண்டிருந்தாலும் என்ன? பொருட்படுத்த வேண்டாம். மனம் பலவீனம் அடை ந்தாலன்றி, அவை நம்மை அணுகத் துணியாது; நம்மைப் பற்றிக்கொள்ளும் திறன் அவற்றிற்கு இருக்காது. இதுவே பேருண்மை. பலமே வாழ்வு ,பலவீனமே மரணம். பலமே இன்பம். பலமே என்றென்றும் மரணமிலாப் பெருவாழ்வு. பலவீனமே ஓயாத சோர்வும் துயரமும். பலவீனமே மரணம்.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா' 14

## பச்சை மிளகாய் ரூ.ஆயிரம் கத்தரிக்காய் ரூ.அறுநூறு இது நிஷாவின் விலையேற்றம்

என்.விஜயன்


இந்த உலகத்தை இயற்கையே இயக்குகிறது. இதனைப் பலர் உணர்ந்து கொள்வதில்லை. அலுவலகங்களில் சில அதிகாரிகள் சீறிச் சினந்து பாய்கிறார்கள்.

பொதுமக்களின் பணிக்காக நியமிக்கப்பட்டவர்கள் சீறிப் பாய்வது அவர்களின் சிற்றறிவின் வெளிப்பாடாகும்.

இதனாலேயே யாழ்.அரச அதிபர் திரு.க.கணேஷ் அவர்கள் பொது நிகழ்வுகளில் உரையாற்றும் போதெல்லாம் அரச பணியாளர்கள் பொது மக்களின் பணிக்காக நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து கொண்டு பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்வார்.

அரச சேவையில் உள்ள அரச அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் சீற்றமுற்றால் பொதுமக்கள் பாதிப்படைவர்.


அதேகோலத்தை இயற்கை கொள்ளுமாக இருந்தால் இந்தப் பூமியில் எவருமே வாழ முடியாதென்பதை ஒரு கணம் உணர்ந்து கொள்வதற்காக நிஷா புயலும் மழையும் வந்து போனது.



வெள்ளத்தில் மக்கள் அவலம்



வெள்ளம் மேவிப் பாயும் சண்டிலிப்பாய் ஐந்துகண் மதகு




யாழ்.மடத்தடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முண்டியடிக்கும் மக்கள் கூட்டம்

படம்: எஸ்.டி.எஸ்.சுரேஸ்

எனவே இயற்கையின் கோபத்தின் முன்னால் நாம் எவருமே நின்று நிலைக்க முடியாதென்பதால் எதிர்வரும் காலங்களிலாவது கோபத்தைத் தணிப்பது நல்லதாகும்.

இதனை வாசிக்கும்போது நிஷாவை எழுத வந்த நீங்கள் தொடக்கத்திலேயே தத்துவம் பேசுவது ஏனென்று வாசகர்களாகிய நீங்கள் முணுமுணுப்பது தெரியாமல் இல்லை.

சண் தொலைக்காட்சியில் அசத்தப்போவது யாரு என்ற நிகழ்ச்சியில் மதுரை முத்து தத்துவம் சொல்வாரே அதே போல் இதனையும் நீங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

பொறுமையின் பெருமையை வலியுறுத்துவதற்காக வந்த நிஷா இன்று வரை இடுக்கண் விளைவித்துக் கொண்டே இருக்கிறது.

வீடுகளுக்குள் வெள்ளம் வந்து போனது. உடைமைகளை நாசம் செய்தது என்ற குறைபாடுகளுக்கு அப்பால் இப்போது சந்தைகளில் மரக்கறி விற்கும் விலையைக் கேட்டால் இரத்த அழுத்தம் ஒரு பக்கமாக அதிகரிக்க மறுபக்கத்தில் சலரோக வியாதி உச்ச மடையும்.

சுருங்கக் கூறின் மரக்கறி விலை அதிகரிப்பு பலருக்கு வியாதியை உண்டுபண்ணும் எனக் கூறிக் கொள்ளலாம்.

திருநெல்வேலிச் சந்தையில் ஒருகிலோ பச்சை மிளகாய் ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது.

5 ரூபாய் சில்லறை இல்லை என்பதற்காக கிள்ளித் தந்த பச்சை மிளகாய் இப்போது நூறு ரூபாய். ஒரு கிலோ கத்தரிக்காய் 600 ரூபாய் கடந்து, அதற்கும் கிடையாதென்ற நிலை ஏற்பட்டு விட்டது.


ஆக,கருணைக்கிழங்கைத் தவிர வேறு எந்த மரக்கறியும் கைகொடுக்க மறுக்கும் புண்ணியத்தைச் செய்த நிஷா யாழ்ப்பாண மக்களை வெறும் சோறு உண்ண வைத்துவிட்டு உறங்கிக் கொண்டிருக்கிறது.

### எரிபொருள் நிலையங்களில் வெள்ளம் புகுந்தது

பாலுக்குள் தண்ணீர் கலக்கும் பாவ காரியம் பற்றிப் பேசிய நம் அற நூல்கள் எண்ணெய்க்குள் தண்ணீர் கலக்கும் பாவ காரியத்தை சொல்லவேயில்லை.

மனிதர்களால் செய்யப்படாத விடயத்திற்கு அறம் கூறுவது தேவையற்றது. ஆனால் நிஷா வெள்ளம் யாழ்.பஸ் நிலையத்திலுள்ள கோண்டாவில் சாலையின் டீசல் குதத்திற்குள் நுழைந்து தன்னை சங்கமிக்க முயற்சி செய்தது.

தண்ணியும் எண்ணெயும் இரண்டறக் கலக்க வைக்கும் முயற்சி வெற்றி பெறவில்லையாயினும், வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு டீசல் நட்டம் ஏற்பட, அவர்கள் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் கலந்து டீசலை வெளியேற்றினர்.



சண்டிலிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம்

படங்கள்: இராகுலன் சங்கானை

இதுபோல யாழ்ப்பாணத்திலுள்ள சில எரிபொருள் நிலையங்களுக்குள்ளும் வெள்ளம் போனதாலும் மின்சாரம் முழுமையாகத் தடைப்பட்டதாலும் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை பெற்றுக் கொள்வதில் மக்கள் படாதபாடு பட்டனர்.

வரிசையில் நின்று எரிபொருளைப் பெறும் 2006ஆம் ஆண்டு கலாசாரத்தை கடும் மழையும் பெரும் புயலும் மீண்டும் ஏற்படுத்தியது.

(வளரும்)

# தென்னாபிரிக்கா சாதனை வெற்றி அவுஸ்திரேலிய அணி பரிதாபம்


சோகத்தில் பொன்டிங்

(பேர்த்)

டி வில்லியர்ஸின் சிறப்பான சதத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி நிர்ணயித்த 414 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை அடைந்து தென்னாபிரிக்க அணி சாதனை வெற்றியை பதிவு செய்தது.

இதன் மூலம் 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டிய தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது–20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 17ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 375 ஓட்டங்களை எடுத்தது.


பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களைமிழந்து 281 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 94 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 319 ஓட்டங்களை எடுத்து தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 414 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதனடிப்படையில் 414 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 227 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளுமான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டி வில்லியர்ஸின் சிறப்பான சதத்தின் மூலம் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 414 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் டி வில்லியர்ஸ் 186 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 106 ஓட்டங்களையும் டுமினி 50 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் அணித்தலைவர் சிமித் 108 ஓட்டங்களையும் கலிஸ் 58, அம்லா 53 ஓட்டங்களையும் எடுத்தனர்.


மகிழ்ச்சியில் டுமினி

பந்துவீச்சில் ஜோன்ஸன் 3 விக்கெட்டுக்களையும் பிரெட்லீ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்காக அபாரமாக துடுப்பெடுத்தாடிய டிவில்லியர்ஸ் ஆட்டநாயகனாக தெரிவானார்.

பேர்த்தில் நேற்று முடிபடைந்த போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்காக ஆரம்பத்தில் அபாரமாக செயல்பட்டு அணித்தலைவர் கிராம் சிமித் தனது 18ஆவது டெஸ்ட் சதத்தை பெற்றதோடு, வெற்றிக்காக மத்திய வரிசையில் வந்த ஏ.பி.டி வில்லியர்ஸும் சதம் பெற்றார்.

இதன் போது டி வில்லியர்ஸ், ஜே.பி.டுமினியுடன் இணைந்து 4ஆவது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாமல் 124 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் தனது கன்னி டெஸ்டில் விளையாடிய டுமினி பொறுப்புடன் செயல்பட்டு 119 பந்துகளில் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இரண்டாவது அதிகபட்ச வெற்றியிலக்கை அடைந்த அணியாக உலக சாதனை படைத்தது.

இதன் முதலிடத்தில் 2003ஆம் ஆண்டு ஜொஹன்னர்ஸ் பேர்க்கில் நடந்த டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி நிர்ணயித்த 418 ஓட்டங்களை அடைந்த மேற்கிந்திய அணி காணப்படுகிறது.

இது மட்டுமல்லாது தென்னாபிரிக்கா 1990ஆம் ஆண்டு மீண்டும் டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஆரம்பித்தது தொடக்கம் அவுஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் போட்டி ஒன்றை வென்ற முதல் சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் வெள்ளிக்கிழமை மெல்பேர்னில் ஆரம்பமாகவுள்ளது.

# இங்கிலாந்து அணி தடுமாற்றம்

(மொகாலி)

அணித்தலைவர் கெவின் பீற்றர்சனின் அதிரடியான சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 282 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது டெஸ்டில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 19ஆம் திகதி மொகாலியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 453 ஓட்டங்களை எடுத்தது.

இதில் காம்பீர் 179 ஓட்டங்களையும் டிராவிட் 136 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் பிளின்டொப்,ஸ்வான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் பனீசர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந் நிலையில் மூன்றாம் நாளான நேற்று தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்து அணி ஓட்டமெதனையும் ஆரம்பிக்காத நிலையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஸ்றொரஸ் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பெல் ஒரு ஓட்டத்தை மாத்திரமெடுத்த நிலையில் ஆட்டமிழந்து வெளியேற இங்கிலாந்து அணி ஒரு ஓட்டத்தை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக குக்குடன் இணைந்த அணித்தலைவர் பீற்றர்சன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தார்.

இந்த ஜோடி இணைப்பாட்டமாக 103 ஓட்டங்களை எடுத்தபோது குக் 50 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய கொலிங்வூட் 11 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழந்து ஏமாற்ற, இங்கிலாந்து அணி 131 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக பீற்றர்சனுடன் ஜோடி சேர்ந்த பிளின்டொப் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார்.

இந்த ஜோடியின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 200 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் பீற்றர்சன் 126ஆவது பந்தில் தனது 15ஆவது சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார்.


பீற்றர்சன்

தொடர்ந்து இந்த ஜோடி அதிரடியாக ஆட இங்கிலாந்து அணி வேகமாக 250 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் பிளின்டொப் தனது 96ஆவது பந்தில் அரைச்சதத்தை கடந்தார். இந்த ஜோடி 5 ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 149 ஓட்டங்களை குவிக்க இங்கிலாந்து அணி 280 ஓட்டங்களை எடுத்த போது அணித்தலைவர் பீற்றர்சன் 144 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து அன்டர்சன் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய பிளின்டொப் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேற்று மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 282 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் அன்டர்சன் ஒரு ஓட்டத்தை எடுத்தி ருந்தார். பந்துவீச்சில் சகீர் கான்,மிஷ்ரா ஆகி யோர் தலா 2 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா,ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# உலக குத்துச்சண்டை

## ஹோலிபீல்டை வீழ்த்தி நிகோலாய் மீண்டும் சம்பியன்

(ஜூரிச்)

உலக ஹெவி வெயிட் குத்துச்சண்டை சம்பியன் போட்டி சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜூரிச் நகரில் நேற்று நடைபெற்றது.

இதில் 4 முறை உலக ஹெவி வெயிட் சம்பியன் பட்டத்தை வென்றவரான இவாண்டர் ஹோலிபீல்ட் (அமெரிக்கா) நடப்பு உலக ஹெவி வெயிட் சம்பியனான நிகோலாய் ஹலேவ் (ரஷியா) மோதினார்கள். உலகம் முழுவதும் இந்தப் போட்டியை ஆவலுடன் எதிர்பார்த்தது.

பரபரப்பான இந்த போட்டியில் ஹோலிபீல்ட் தோல்வியடைந்தார்.

12 சுற்றுகளை கொண்ட இந்த போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் நிகோலாய் வென்று மீண்டும் சம்பியன் பட்டம் பெற்றார்.

3 நடுவர்களில் ஒரு நடுவர் இருவருக்கும் சமமான புள்ளிகளை வழங்கி இருந்தார் மற்ற 2 நடுவர்கள் நிகோலாய்க்கு ஆதரவாக 116-112,115-114 என்ற கணக்கில் புள்ளிகளை வழங்கி இருந்தனர். இதனால் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

46 வயதான ஹோலிபீல்ட் வெற்றி பெற்று இருந்தால் அதிக வயதில் உலக ஹெவி வெயிட் பட்டத்தை பெற்றவர் என்ற வரலாற்று சாதனையை படைத்து இருப்பார். 5-ஆவது முறையாக அவரது ஹெவி வெயிட் சம்பியன் பட்டத்தை நிகோலாய் தகர்த்தார்.



இந்த தோல்விக்காக ஏமாற்றம் அடையவில்லை தனது ஆட்டமுறை திருப்தி அளித்ததாக ஹோலிபீல்ட் தெரிவித்தார்.

உலக ஹெவி வெயிட் சம்பியன் பட்டத்தை மீண்டும் கைப்பற்றியுள்ள நிகோலாய்க்கு 35 வயதாகிறது. 7 அடி உயரம் கொண்டவர். குத்துச்சண்டை வரலாற்றில் அதிக உயரம் கொண்ட ஹெவி வெயிட் சம்பியன் நிகோலாய் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு 12 இலட்சம் அமெரிக்க டொலர்

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழங்குகிறது

(கராச்சி)

பாகிஸ்தானில் விளையாட ஒப்புக் கொண்டதற்காக இலங்கை கிரிக்கெட் அணிக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை 12 இலட்சம் அமெரிக்க டொலர் தொகையை வழங்க உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி ஜனவரி மாதம் பாகிஸ்தானுக்கு சென்று விளையாட இருந்தது. ஆனால் மும்பை தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதை அடுத்து இந்த சுற்றுப் பயணம் ரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து இலங்கை அணி பாகிஸ்தானில் விளையாட முன்வந்தது. ஜனவரி 19ஆம் திகதி கராச்சியில் இந்த தொடர் ஆரம்பமாகிறது.

இந் நிலையில் இந்த சுற்றுப் பயணத்தில் விளையாட ஒப்புக் கொண்டதற்காக இலங்கை அணிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 12 இலட்சம் டொலர்கள் சிறப்பு தொகையாக வழங்க உள்ளது. இதனை அந்நாட்டு கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

திட்டமிடாத பயணம் என்பதால் இலங்கை அணிக்கு இந்த தொகையை வழங்குவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. மேலும் இந்த தொடருக்காக ரென் ஸ்போர்ட்ஸ் தொலைக்காட்சியோடு ஒளிபரப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது.

(5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்,



# நான்காவது ஈழப் போர்...

இதனால் கிளிநொச்சியை நோக்கிய படை நகர்வு இந்த வருடத்திற்குள் நிறைவு பெறமாட்டாது. நான்காவது ஈழப்போர் 2009 ஆம் ஆண்டும் தொடரும். இவ்வாறு பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.சண்டே ரைம்ஸ் வார ஏட்டில் அவர் எழுதிய கட்டுரையின் விபரம் வருமாறு,

நேற்று முன்தினம் முறிகண்டி -இரணைமடு பகுதியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த பாரிய மோதலின் போது படையினர் மீது புலிகள் 'மோட்டார் பருவமழை' தாக்குதலை மேற்கொண்டதாக இக்பால் அத்தாஸ் வர்ணித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் தமிழ் மக்களை காப்பதற்கான இறுதி யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் இடம் பெயர்ந்துள்ள மக்களை நேரடியாகச் சந்தித்துக் கூறிவருவதாகக் குறிப்பிட்டுள்ள இக்பால் அத்தாஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

7ஆயிரம் இலங்கை படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட படை நடவடிக்கை நான்காவது ஈழப்போரில் மிகப் பெரும் எதிர்தாக்குதலை சந்தித்துள்ளது.

இந்த நடவடிக்கையில் படைத்தரப்பு மிகவும் அதிகளவு சூட்டுவலுவை பயன்படுத்தியிருந்தது. கிளிநொச்சியை கைப்பற்றுவது தான் படையினரின் பிரதான நோக்கம்.

ஐந்து முனைகளில் உக்கிர மோதல்கள் நடைபெற்றுள்ள போதும் ஊடகவியலாளர்கள் களமுனைகளுக்கு செல்ல முடியாததால் இழப்புக்கள் தொடர்பான உண்மையான தகவல்களை பெறமுடியாதுள்ளது.

படை வட்டாரங்களில் இருந்து தகவல்களை பெறுவதும், முன்னர் போன்று இலகுவானதல்ல. கடந்த வாரங்களாக படைத்துறை மற்றும் பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் கிளிநொச்சியை கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கை தொடர்பான பேச்சுக்களே அதிகம் இருந்தன.

இந்த நடவடிக்கை தொடர்பான கவனம் இலங்கையில் மட்டுமல்லாது முழு உலகிலும் ஏற்பட்டிருந்தது. கிளிநொச்சி விரைவில் கைப்பற்றப்படலாம் எனவும் அது தொடர்பான தகவல்களை சேகரிக்கும் நோக்கத்துடன் வந்திருந்த வெளிநாட்டு ஊடகவியலாளர்களை சந்தித்த போது அவர்கள் கிளிநொச்சி சில நாட்களில் வீழ்ந்துவிடும் என நம்பியிருந்தனர். தற்போது அவர்களில் பலர் தமது நாடுகளுக்கு திரும்பி சென்றுவிட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 53 மற்றும் 55ஆவது படையணிகள் முகமாலை களமுனையில் நகர்வை தொடங்கியிருந்தன. 53ஆவது படையணி கிளாலி நோக்கியும், 55ஆவது படையணி முகமாலை நோக்கியும் நகர்வை மேற்கொண்டிருந்தன.

பரந்தன்-பூநகரி வீதியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த 'எல்' வடிவ மண் அரணை கைப்பற்றும் நோக்கத்துடன் 58 ஆவது படையணி நகர்வை தொடங்கியிருந்தது. அங்கு கடுமையான மோதல்கள் தொடங்கின.

57ஆவது படையணி கிளிநொச்சி நோக்கிய நகர்வில் ஈடுபட்டிருந்த போது அடம்பன் பகுதியில் உக்கிர மோதல்கள் ஆரம்பித்திருந்தன. கடும் மழை அந்த பிரதேசத்தை சேறும் சகதியுமாக மாற்றியிருந்தது.

இந்தப்பகுதியில்தான் அதிகளவான படையினர் காணாமல் போயிருந்தனர். எத்தனை பேர் காணாமல் போயுள்ளனர் என்பது தொடர்பான தகவல்களை சில காரணங்களால் அறிய முடியவில்லை.

வன்னிக்கு மேற்குப் புறமாக கடந்த புதன் கிழமையே அதிக மோதல்கள் இடம்பெற்றிருந்தன. திருமுறிகண்டி மற்றும் இரணைமடு பகுதிகளில் கடுமையான மோதல்கள் இடம் பெற்றிருந்தன. இந்த மோதல்களில் இரு தரப்பும் கடும் இழப்புக்களை சந்தித்துள்ளன. படையினர் தமது முன்னரங்க நிலைகளை மாற்றி அமைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் அலை அலையாக வந்து தாக்கியதாகவும் சில இடங்களில் மிக அருகாமையில் நேரடி மோதல்கள் நடைபெற்றதாகவும் விடுதலைப் புலிகள் மோட்டார் எறிகணைகளை மழை போல பயன்படுத்தியதாகவும் தனது பெயரை குறிப்பிடாத படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனவே விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக தமது ஆயுத விநியோகத்தை பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக பீரங்கி குண்டுகளையும், மோட்டார் எறிகணைகளையும்,ஏனைய ஆயுதங்களையும் தருவித்து வருவதாக படையினரின் புலனாய்வுதுறை தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடு ஒன்றுடன் ஆயுத கொள்வனவு தொடர்பாக அவர்கள் அண்மையில் பேச்சுக்களையும் நடத்தியுள்ளதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. இராணுவம் கடந்த மாதம் மேற்கொண்ட நகர்வுகளின் போது ஒரு நகர்வில் கிளிநொச்சியை கைப்பற்றி விடுவார்கள் என பலர் நம்பினார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சமரில் மூன்று முக்கிய படையணிகள் பங்கு பற்றியிருந்தன. அவர்களின் ஒரே நோக்கம் கிளிநொச்சிநோக்கியதே. செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பெரும் தோல்வியானது முல்லைத்தீவு அல்லது கிளிநொச்சி நோக்கிய நகர்வுகள் இந்த வருடத்திற்குள் நிறைவுபெறும் என்ற நம்பிக்கையை தகர்த்துள்ளது. எனவே நாலாவது ஈழப்போர் 2009ஆம் ஆண்டிற்கும் தொடரப்போகின்றது என அந்த ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ஆயுதம்...

துடைத்தெறிந்துவிடுவர். ஆனால் சில தெறிகட்ட சக்திகள் பல்வேறு மறைமுக வழிகளில் செயற்படுவர்.உலகிலேயே மிகவும் மோச மான பயங்கரவாதிகளுடன் மெதுவாகவும் அதேநேரம் உறுதியுடனும் போராடிவரும் படையினர் அவர்களிடமிருந்து ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீட்டு வருகின்றனர்.

அரசாங்கம் போரை ஆரம்பிக்கும் முன் னர் சாதாரண மக்களுக்கு முன்னுதாரணமாக தாம் தமது பிள்ளைகளை போருக்கு அனுப்பிவைத்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (ந-5)

# ஆனந்தசங்கரி யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேரில் பார்வையிட்டு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய யாழ்ப்பாணம் வந்துள்ளதாக அந்தக் கட்சியின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை பெற்றுக் கொடுக்கும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டுள்ளதாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-5)

## மந்துவில்,...

அடக்கம் செய்யுமாறும் நீதவான் பொலிஸாருக்குப் பணித்துள்ளார்.

இதேவேளை கோப்பாய் இருபாலையைச் சேர்ந்த சிவக்கொழுந்து யோகேஸ்வரன் (51) என்பவர் வீட்டிலிருந்து காணாமல்போய் மூன்று நாட்களின்பின் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவருடைய சடலத்தை மீட்ட கோப்பாய் பொலிஸார் அதனை யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

(ந-5)


O/L எடுத்தவர்களுக்கான
பிரிவுகள் ஆரம்பம்-(24.12.2008)
தெளிவான முறையில்......
இலகு தமிழ் விளக்கத்துடன்.....
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By Mr.Jyothy
பருத்தித்துறையில்: OXFORD ENGLISH ACADEMY
P.K.LANE
24.12.2008 (Wednesday) - 10.00 A.M
நெல்லியடியில்: MATHS CENTRE இல்
24.12.2008 (Wednesday) - 9.00 A.M
(அனுமதிக்கு முந்துங்கள்)
(C-1869)



MANOJ EXPRESS
யாழ்.-கொழும்பு விமான சேவை
தினசரி சேவை உண்டு
ஒருவழிப் பயணம் ரூபா. 10,000/=
ஆசனத்திற்கு முன் பதிவு செய்யவும்.
தொடர்பு: No. 6, RAM COM
NEW MARKET.
Tel:- 222 3916
Mobile:- 077 926 9066
(C-1872)


# மரண அறிவித்தல்

## திருமதி அபிராமிப்பிள்ளை தியாகராசா

பருத்தித்துறை பூதவராயர் கோவில் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அபிராமிப்பிள்ளை தியாகராசா 20.12.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு முத்தர் தியாகராசா (ஓய்வு பெற்ற உபதபால் அதிபர் வன்னேரிக்குளம்) அவர்களின் அன்பு மனைவியும், வரதராசா, ஜமுனா, சுகுணா, வதனா, ஆனந்தராசா, மோகனா, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், வடிவாம்பாள், முருகேசு, ரவி, சண்முகநாதன் (நாதன் மில் பருத்தித்துறை), சிவகுமாரி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

**அன்னாரின் ஈமக்கிரியைகள் சுப்பர்மடம் மயானத்தில் 22.12.2008 திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறும்.**

**தகவல்:- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(சி/1870)


Diploma in Computer Technology
முற்றிலும் தரம் 5 புலமைப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கானது.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.12.2008 12.00PM
விபரங்களுக்கு நேரில்: 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By UNDP/JRRP



2009ல் வெளிவருகின்றது
2009 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் தரம்:5 மாணவர்களுக்கான புதிய பாடத்திட்ட
அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய, அகில இலங்கையில் சாதனை படைத்த
திருமலை கணேசலிங்கம்
(உதவிக்கல்விப்பணிப்பாளர்,பிரதமபரீட்சகர்)
வருடந்தோறும் தயாரித்து வெளிவிடும்
வெற்றித்தேர்வு (Top Question paper)
தரம்:3.2009 ஜனவரிமுதல்நவம்பர்வரை 10தேர்வுகள்
தரம்:4.2009 ஜனவரிமுதல்நவம்பர்வரை 15தேர்வுகள்
தரம்:4.2009 ஜனவரிமுதல்யூலைவரை 20தேர்வுகள்
விடை, இலவச கையேட்டுடன் பலவர்ண நிறங்களில்
பாடசாலை ஆரம்பமாக உங்கள் கைகளில் கிடைக்கும்
உடன் புத்தகசாலையில் பதிவு செய்யுங்கள் அட்டையைப்பெறுங்கள்
விரிவான விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள் 0212229016



NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
2011 A/L
☆ கணித, உயிரியல் வகுப்புகள் ☆
☆ எமது வழமையான ஆசிரியர் குழு ☆
ஆரம்பம்:- 28.12.2008 - 9.30 A.M
(C-1900)



NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA
G.C.E. A/L MATHS & SCIENCE CLASSES
2011 Batch
English Medium
PHYSICS: MR.S.SOTHILINGAM
CHEMISTRY: MR.N.MAHESWARAN
COM.MATHS: MR.P.SENTHILNATHAN
BIOLOGY: MR.T.THAMBIRAJAH
AND OUR USUAL TEACHER'S
COMMENCES ON 28.12.2008
(LIMITED NUMBER'S WILL BE ADMITED
ENROL EARLY)
(C-1901)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.